# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட் சகோதரிகள்

ரெஜினாமேரி FIHM, வெர்ஜின் OSM, எதெல்பெர்காமேரி OSM, ஜோசப்பிட்டாமேரி OSM, பொலன்ஷியா OSM – திருச்சி; அமிர்தராணி OSM, கலிஸ்டா OSM, ஸ்டெல்லாரோஸ் CIC – திண்டுக்கல்; மேரி செசாரியா SSAM, மேரி ரால்ஃப் FBS, லூர்து மேரி CIC, மரிய சீலி OSM – சென்னை; செலின் SJC, சின்னராணி SJC - அணிலாடி; அனன்சியா மேரி FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; வித்யா மேரி OSM, சிரோன் OSM - நெல்லை; லில்லி இசபெல்லா மேரி OSM, மரிய விஜி OSM – மதுரை; ஆக்னஸ் ரோஸ் மேரி OSM – தூத்துக்குடி; அருள் சீலி – முட்டம்; சகாயம் SJC, சிரில் SJC - கடலூர்; ஜூ லியானா FBS – தஞ்சாவூர்; சலேத் மேரி – தாராபுரம்; ஜெயா FSJ – மையனூர்; அருள் மேரி அந்தோனியா SSAM, ஜெனிபர் FBS – காஞ்சிபுரம்; செபாஸ்டி FBS – கல்பட்டு; லில்லி கரோலின் OSM – நாகர்கோவில்.

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், பாத்திமா, சந்தனம், ஆனி பீட்டர் ராஜ், ஜான் ஜோசப், மேரி மார்கரேட், கிளாரா லூர்து மேரி, லீமா தெரஸ், அனிரூத் ஜோசுவா, செலின்மேரி, இமாக்குலேட் சோபியா – திருச்சி; லீலாவதி, மார்கரேட் பெல்சியா, அமல செல்வி, ஜோஸ்பின் மேரி, இருதய விஜிலா – திண்டுக்கல்; மரிய வென்சி, லூசியாள் - சென்னை; மரிய பிரகாசம் - தருமபுரி; மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு – கோவை; திவ்யன், டேப்னி - திருப்பத்தூர்; சிப்ரியான் - தெளி; ரோஸ்மேரி – வீரக்குறிச்சி; ராணி – தூத்துக்குடி; ஷரோன் - மதுரை; இமாக்குலேட் - காஞ்சிபுரம்; ஜெயராஜ் - கோவளம்; சற்பி – அரியலூர்.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**அருட்சகோதரி. மரிய விஜி OSM – மதுரை**

**திரு. சிப்ரியான் – தெளி**

Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.







பதிப்பாசிரியர் பக்கம்

# தனிமை

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம் வாழ்வில் ஏதாவது ஒரு சூழ்நிலையில் தனிமையை அனுபவித்திருப்போம் அல்லது தனிமையாக இருக்க விரும்பியிருப்போம். தனிமை ஒருசிலரை வாட்டுகின்றது ஆனால் அதே தனிமை ஒருசிலருக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் தருகிறது. தனிமை பல நேரங்களில் நம்முடைய வாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தினாலும் சில நேரங்களில் நேர்மறையான தாக்கங்களையும் நம்மில் விதைக்கின்றது. ஆம், மனிதன் தனிமையில் இருக்கும் போது அவனுடைய சிந்தனைகளையும் எண்ணங்களையும் ஒருமனப்படுத்தி பல சாதனைகளைச் செய்யத் தூண்டியதை நாம் வரலாற்றில் காணலாம். பல அறிவியல் மற்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்குப் பின்னால் இந்த தனிமை மிகவும் அத்தியாவசியமானதாக இருந்ததை நாம் உணரலாம்.

'இயற்கையிலேயே மனிதன் ஒரு சமூக பிராணி' (Man is by nature a social animal) என்று அரிஸ்டாட்டில் என்னும் கிரேக்க தத்துவயியலாளர் கூறுகிறார். நாம் அனைவரும் படைக்கப்பட்டதன் நோக்கமே ஒருவரையொருவர் அன்பு செய்து ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவே. இப்படிப்பட்டப் பின்னணியில் நாம் மனக்கலக்கம் அடையும்போது, பணியின் நிமித்தம் உடல் மற்றும் மனச்சோர்வடைகின்றபோது, சரியான முடிவெடுக்க முடியாமல் குழப்பமடைகின்றபோது, கோபம் மற்றும் எரிச்சல் ஏற்படுகின்றபோது, உறவுகளால் கைவிடப்படுகின்றபோது அல்லது ஏமாற்றப்படுகின்றபோது, எதையாவது சாதிக்கத் துடிக்கின்றபோது, ஓய்வு தேவைப்படுகின்றபோது இந்த தனிமை நமக்கு மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கின்றது. இத்தகைய தனிமை நமக்கு மனநிம்மதியையும், அமைதியையும், தீர்க்கமான முடிவெடுக்கக்கூடிய ஒரு புரிதலையும், ஆற்றலையும்,

## உள்ளே...

ஆண்டவரை அர்ப்பணித்த அன்னை மரியா - 05
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விழுவில்லா வார்த்தை பழுதில்லாப் பெண் - 15
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 18
மரியா - கடவுளின் கடிதம் - 24
குடும்ப வாழ்வில் மரியா - 28
அன்னையின் அரவணைப்பில் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 31

புத்துணர்வையும், வாழ்வில் சாதிக்கும் தீர்மானத்தையும், உந்து சக்தியையும் நமக்குத் தருகின்றது. இதே தனிமையானது ஒருவருடைய தவறை சுட்டிக்காட்டவும், அவரை நல்வழிப்படுத்தவும், உறவுகளிடையே இருக்கும் விரிசல்களை சரிசெய்து ஒரு சரியான புரிதலை ஏற்படுத்தவும், துக்கம் அனுசரிக்கவும், உள்ளத்து உணர்வுகளையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிப்படுத்தவும் பயன்படுகின்றது. அதே தனிமை நாம் இறைவனோடு உறவாடவும், இறைவன் பேசுவதை நாம் கேட்கவும் செய்கிறது. இவ்வாறு நம்மை இறைவனோடு ஒன்றிணைக்கும் ஒரு மாபெரும் செயலை இந்த தனிமையானது செய்கிறது.

‘பேதுரு அவரைத் **தனியே** அழைத்துக் கடிந்துகொண்டு…’ (மத் 16:23); ‘நீங்கள் பாலைநிலத்திலுள்ள **தனிமை**யான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்’ (மாற் 6:31); ‘இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து **தனிமை**யான இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்’ (மாற் 1:35); ‘இயேசு பேதுருவையும், யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் **தனிமை**யாகக் கூட்டிக்கொண்டு போனார்’ (மத் 17:1); ‘உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் **தனித்திருக்கும்**போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்டுங்கள்’ (மத் 18:15) என்று தனிமையைப்பற்றி பல விவிலிய மேற்கோள்கள் நமக்கு இருக்கின்றன. தனிமையானது நம்மிடையே பல தீய நாட்டங்களையும் சிந்தனைகளையும் தூண்டினாலும் அதே தனிமை இறைவார்த்தையின் துணைகொண்டு தூய ஆவியாரின் வழிநடத்துதலால் அவற்றை விரட்டியடிக்க முடியும் என்பதற்கு இயேசு பாலைநிலத்தில் அலகையினால் சோதிக்கப்பட்ட நிகழ்வு (மத் 4:1-11) நமக்கு சான்றாகத் திகழ்கின்றது.

இந்த தனிமை அன்னை மரியாவுக்கும் தன் வாழ்வில் நிச்சயம் தேவையானதொன்றாக இருந்திருக்க வேண்டும். இறைவாக்கு அவருக்கு வானதூதரால் அருளப்பட்டபோது அதை புரிந்துகொள்ள தனியாக தம் உறவினரை நோக்கிப் பயணம் மேற்கொள்கிறார். மேலும் அவர் தம் மகனை மாட்டுத்தொழுவத்தில் ஈன்றபோது, இயேசு காணாமல் போன போது, கணவனை இழந்தபோது, மக்கள் தம் மகனை பித்துப்பிடித்தவன் என்று கூறியபோது, கல்வாரி பயணத்தின் போது, இயேசுவின் இறப்பிற்கு பின்பு என்று பல நேரங்களில் அவருக்கு தனிமை அத்தியாவசியமானதாக இருந்திருக்கும். மேலுமாக அவர் தனிமையில் இருக்கும்போதுதான் ஆண்டவரது வார்த்தை அவருக்கு அருளப்பட்டது, அதே தனிமைதான் அவரை இறைவார்த்தையை தன் உள்ளத்தில் இருத்தி சிந்திக்கத் தூண்டியது, அதே தனிமைதான் இறைத்திட்டத்தை தமது வாழ்வில் முழுமையாக செயல்பட வைத்தது, அதே தனிமைதான் அவரை இறைவனின் துணையை நாடத் தூண்டியது. இயேசு கோவிலில் காணாமல் போன போது, கானாவூர் திருமணத்தின்போது, கல்வாரி பயணத்தின்போது என்று தம் வாழ்வின் அனைத்து நிகழ்வுகளிலும் இறைமகன் இயேசுவின் பிரசன்னத்தை மையப்படுத்தியே இருக்கின்றது. அன்னை மரியா தம் வாழ்வில் பல துயரங்களை அனுபவித்திருந்தாலும் அவை அனைத்தின் போதும் தனிமையில் நின்று வாடி துவண்டுவிடாமல் இறைவனின் வார்த்தையாலும் தூய ஆவியாராலும் மீண்டும் புத்துணர்வு பெற்று இயேசுவின் சீடர்களையும் புது வாழ்வு பெற அவர்களுக்கு உந்து சக்தியாகவும் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தார். அதே அன்னை மரியா இன்றும் நம்மை தனிமையாக சிந்திக்கத் தூண்டுகிறார். நாமும் நம் வாழ்வின் தனிமையில் இறைத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்த விழைவோம். தனிமையில் இருக்கும்போது துயரம், சோதனைகள் நம்மை ஆழ்த்தினாலும் அன்னை மரியாவின் ஆறுதலான உடனிருப்பும், பரிந்துரையும், இயேசு கிறிஸ்துவின் அருளும் ஆசியும் நம்மை நிறை மகிழ்ச்சிக்கும் வாழ்வுக்கும் இட்டுச் செல்கின்றது என்ற நம்பிக்கையில் நாளும் வீறுநடை போடுவோம். அன்னை மரியா நம் அனைவரையும் பாதுகாத்து வழிநடத்துவாராக!





## வாசகர்களின் கவனத்திற்கு!

அன்பார்ந்தவர்களே! ௨௦௨௨ ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இவ்விதழின் ஆண்டு சந்தாவானது ரூபாய் ௧௫௦/- ஆக உயர்த்தப்படுகிறது. இதழ் அச்சிடுவதற்கும் அதை ௬ ரூபாய் தபால் தலையொட்டி அஞ்சல் செய்வதற்கும் ஆகும் செலவு ஒரு மாதத்திற்கு ஒரு பிரதியின் விலை ரூ ௧௫/- ஆகவே இவ்விதழின் ஆண்டு சந்தா ரூபாய் ௧௫௦/- யை இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே செலுத்துமாறும் ௨௦௨௧ ஆம் ஆண்டு சந்தாவை செலுத்தாதவர்கள் தயவுசெய்து சந்தாவினை செலுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்விதழானது பலரை சென்றடையவும் அன்னையின் புகழை பாரதமெங்கும் பகிர்ந்திடவும் ஒத்துழையுங்கள். மேலும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விரும்புவோர் கீழ்க்காணும் அலைபேசி எண்ணிற்குத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

பணி. அ. சின்னப்பராஜ் ம.ஊ.ச
8680860308

**3. கண்ணியம்மாள் - சோழிங்கநல்லூர், சென்னை**

எனக்குத் திருமணமாகி குழந்தை இல்லாமல் இருந்தபோது இந்த ஆலயத்திற்கு வந்து ஜீவமாதாவிடம் வேண்டியதன் பலனாக எனக்கு குழந்தை பிறந்தது. இப்போது என்னுடைய தங்கைக்கு குழந்தை பிறந்த உடனேயே மிகவும் ஆபத்தான நிலையில் குழந்தையை அவசர சிகிச்சை பிரிவில் வைத்திருந்தனர். ஜீவமாதாவிடம் குழந்தைக்காக மன்றாடினோம். அடுத்த நாளே குழந்தை பூரண சுகத்துடன் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜீவமாதாவுக்கு நன்றிகள்!

**4. ஷர்லி – கோவை**

எனக்கு 2019 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் ஜீவமாதாவிடம் குழந்தைக்காக மன்றாடினேன். அதேபோல் 2020 ஆம் ஆண்டு நான் கர்ப்பமானேன். குழந்தை பிறந்தது ஆனால் குழந்தையின் எடை குறைவாக இருக்கிறது என்று சொல்லி சிகிச்சை செய்தனர். நான் மீண்டுமாக அன்னையிடம் அழுது மன்றாடினேன். குழந்தையின் எடை அதிகரித்து இப்போது குழந்தையும் நாங்களும் மகிழ்வாக இருக்கின்றோம். ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள்.

**5. சாராள் - சோழிங்கநல்லூர், சென்னை**

எனது இரண்டாவது மகனுக்கு உடலில் அரிப்பு போன்று வந்தது. நான் ஜீவமாதாவிடம் செபித்ததில் அவன் முழுமையாக குணமடைந்துவிட்டான். ஜீவமாதாவுக்கு நன்றி!

**6. பிலோமின் குயின் மேரி – திருவண்ணாமலை**

எனக்கு 2016 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 3 ஆண்டுகளாக குழந்தை இல்லை. நான் ஒரு ஊனமுற்றவள் அதனால் எனக்கு பிறக்கும் குழந்தையும் அப்படி இருக்கக்கூடாது என்று பல கனவுகளுடன் இருந்தேன். என் கணவர் கல்லூரியில் பணிபுரிகின்றார். அவருக்கு ஒருவர் சொல்லிதான் இந்த ஆலயத்திற்கு வந்தோம். நாங்கள் இருவரும் அன்னையிடம் நம்பிக்கையோடு மன்றாடி சென்றோம். நான் கருவுற்று எந்தவொரு குறைபாடுகளுமின்றி ஒரு குழந்தையை ஆரோக்கியத்துடன் அன்னையின் அருளால் ஈன்றிருக்கிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி!

**7. ஹெலன் - கனடா**

எனக்னு 2010 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 7 வருடத்திற்கு முன்பு இந்த ஆலயத்திற்கு வந்து குழந்தை வரத்திற்காக மன்றாடி சென்றோம். அன்றிலிருந்து இன்று வரை ஜீவமாதாவிடம் தொடர்ந்து மன்றாடினோம். 2019 ஆம் ஆண்டு நான் கருவுற்று ஒரு அழகிய குழந்தையைப் பெற்றெடுத்தேன். குழந்தை பிறந்து மூன்று வாரங்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை செய்தனர். குழந்தையின் நலனுக்காக அன்னையின் பரிந்துரையை மன்றாடினேன். குழந்தை பூரண சுகம் பெற்றது. 9 வருடங்கள் கடந்து பல மருத்துவர்கள் கைவிடப்பட்ட நிலையிலும் எங்களுக்கு குழந்தை பாக்கியத்தை அளித்த ஜீவமாதாவுக்கு நன்றிகள்.





# ஆண்டவரை அர்ப்பணித்த அன்னை மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

இயேசு பிறந்த நாற்பதாம் நாள், மரியாவும் யோசேப்பும் குழந்தையைக் கோவிலில் அர்ப்பணிக்கச் செல்லும் விழா பெப்ருவரி மாதம் 2 ஆம் நாள் திருஅவையால் சிறப்பிக்கப்படுகின்றது. இவ்விழா பல சிந்தனைகளை நம்மில் எழுப்புகின்றன. மரியா திருச்சட்டத்தை நிறைவேற்றுவதில் கருத்தாய் இருக்கிறார். ஏழை அளிக்கும் எளிய காணிக்கையை இறைவன் மனமுவந்து ஏற்கின்றார் என்ற உறுதியுடன் யோசேப்பு இரு மாடப்புறாக்களை தாயர் செய்கின்றார். ஆண்டவர், ஆண்டவர் இல்லம் நோக்கிச் செல்கிறார். மெசியாவைக் காண்பதற்குமுன் தான் சாகப் போவதில்லை என்று இறைவாக்கினர் சிமியோன் காத்திருக்கின்றார். அன்னாவும் மீட்பரைக் கண்டு அவரைப்பற்றி பிறரும் அறிய உதவுகிறார். பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியான மீட்பராம் இயேசு, உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார். இத்தகைய பல்வகைப் பரிமாணங்களை உள்ளடக்கிய விழா தரும் செய்தியை இக்கட்டுரையில் காண்போம்.

**யூதரின் திருச்சட்டம்**

ஆண்டவர் மோசே வழியாக வழங்கிய திருச்சட்டத்தை யூதர்கள் பெரிதும் போற்றினர். எழுத்துப் பிசகாமல் பின்பற்றினர். தலைமகன் அர்ப்பணம் மிகவும் முக்கியமானதொன்றாக நடைமுறையில் இருந்தது. விடுதலைப்பயண நூலில் நாம் படிக்கின்றோம், ஆண்டவர் மோசேயை நோக்கி, "தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்; இஸ்ரயேல் மக்களிடையே மனிதரிலும் கால்நடைகளிலும் கருப்பையைத் திறக்கும் எல்லாத் தலைப்பேறும் எனக்குரியவை" (விப 13:1-2) என்று உரைத்தார். மற்றுமொரு சட்டத்தையும் நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். லேவியர் ஆகமத்தில், பேறுகாலப் பெண்களைத் தூய்மைப்படுத்துதல் தொடர்பான யூதச்சட்டம் பின்வருமாறு கூறுகின்றது. 'ஆண் குழந்தையைப் பெற்ற ஒரு பெண் நாற்பது நாட்களுக்கு தூயதான எந்தப் பொருளையும் தொடலாகாது; தூய தலத்திற்குள் வரலாகாது; தூய்மையடையும் காலக்கெடுவிற்குப் பின்னர், ஓராண்டு நிறைவுற்ற செம்மறி ஒன்றை எரிபலியாகவும், புறாக்குஞ்சு அல்லது காட்டுப்புறா ஒன்றைப் பாவம் போக்கும் பலியாகவும் குருவிடம் சந்திப்புக்கூடார நுழைவாயிலுக்குக் கொண்டு வர வேண்டும். ஆட்டுக்குட்டி கொண்டு வர வசதி இல்லாதவர், இரண்டு காட்டுப் புறாக்களையோ, இரண்டு புறாக் குஞ்சுகளையோ கொண்டு வந்து, ஒன்றை எரிபலியாகவும், மற்றதை பாவம் போக்கும் பலியாகவும் படைத்து, அவற்றால் குரு அவளுக்கு கறைநீக்கம் செய்வார்; அப்போது அவள் தூய்மையாவாள்' (லேவி 12:1-8).

இத்தகைய சட்டங்களை நிறைவேற்ற மரியா முழுமனதுடன் முன் வருகிறார். மரியா அமல உற்பவி, அருள் நிறைந்தவர், ஆண்டவரின் கண்களில் பேறுபெற்றவர், ஆவியானவரின் வல்லமையால் நிரப்பப்பெற்று இறைமகனை தன் உதரத்தில் சுமந்து இறைவனின் தாயாகும் பேறுபெற்றவர். ஆனால் தாழ்ச்சியுடன், தூய்மைச் சடங்கிற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டார். தலைமகனை இறைவனுக்கு அர்ப்பணித்து காணிக்கைப் பொருட்களை குருவிடம் வழங்கி மீட்டுக் கொண்டு வருகிறார். திருச்சட்டத்தை நிறைவேற்றவே வந்தேன் என்று இயேசு கூறுவார். அதற்கு முன்பே மரியா திருச்சிட்டத்திற்கு முழுவதுமாக பணிகிறார். இங்கு அன்னை மரியா நமக்கு ஒரு மேல்வரிச் சட்டமாகத் திகழ்கிறார்.

**இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தல்**

‘படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது! என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது’ (திபா 84:1-2) என்ற திருப்பாடல் ஆசிரியரின் மனநிலையுடன், பரிசுத்த திருக்குடும்பம் எருசலேம் தேவாலயத்தை நோக்கி விரைகின்றது. திருச்சடங்குகளை நிறைவேற்றும் முன்பே சிமியோன் தம் கரங்களில் குழந்தையை ஏந்துகிறார். கடந்த காலமும் நிகழ் காலமும் சந்திக்கும் நேரம் உன்னதமானது. இத்தலைமுறைகளை இணைக்கும் பாலமாக குழந்தை இயேசு இருக்கின்றார். வயதான சிமியோன், அன்னா இறைவாக்கினர்கள் ஒருபுறம் காலங்காலமாக பல இறைவாக்கினர்கள் முன்னறிவித்த, எதிர்பார்த்த மெசியாவைக் காணும் பேறுபெற்ற பழைய ஏற்பாட்டின் இறுதியில் வாழ்ந்த இறையடியார்கள் இவர்கள். மறுபுறம் இயேசுவின் பெற்றோர் புதிய ஏற்பாட்டின் புது விடியலாய் ஒளிரும் இயேசு இவர்கள் மத்தியில் உலகின் மீட்பராக தன்னை வெளிப்படுத்துகின்றார்.

இயேசு பிறந்ததும் மூன்று நிலையில் அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். ஏழை இடையர்களுக்கு வானதூதர் வழியாக தமது பிறப்பை அறிவிக்கின்றார். விண்மீன் மூன்று ஞானிகளை, பெத்லகேம் குடிலுக்கு அழைத்து வருகிறது. இறைவாக்கினர் சிமியோன் வழியாக புறவினத்தாரின் ஒளியாக, இஸ்ரயேலின் மாட்சியாக இயேசு அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றார். குழந்தையைத் தம் கரங்களில் தூக்கியதும், சிமியோன், தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு, தன் இதயத்தின் ஆழத்திலிருந்து இறைவனைப் புகழ்ந்து பாடுகிறார். இறைவன் ஏற்பாடு செய்துள்ள மீட்பை தன் கண்கள் கண்டு கொண்டதால் நிம்மதியாக தான் அவரிடமே செல்கிறேன் என்றும் இந்த மீட்பு பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை என்றும் மனம் விட்டுக் கூறுகிறார். இயேசுவின் எதிர்கால வாழ்வு, பணி









# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. புதுமைசவரி ம.ஊ.ச.
சோழிங்கநல்லூர், சென்னை

2022 ஆம் ஆண்டின் முதல் நாளே மாதத்தின் மற்றும் ஆண்டின் முதல் சனிக்கிழமை. புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் கலந்து கொண்டு இறையாசியைப் பெற்றிருந்தாலும் பக்தர்கள் பலரும் ஜீவமாதாவின் பரிந்துரையால் இறையருள் பொங்கும் சோழிங்கநல்லூர் ஆலயத்திற்கு பக்தர்கள் பலரும் பல்வேறு இடங்களிலிருந்து வந்து அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இவ்வாண்டு முழுவதையும் அன்னையின் பாதத்தில் வைத்து இறையாசி வேண்டினர். மேலும் பலர் தங்கள் நம்பிக்கையின் சாட்சியாக நிகழ்ந்த தங்கள் வாழ்வின் அற்புதங்களை பக்தர்கள் அனைவருக்கும் எடுத்துரைத்து அவர்களது நம்பிக்கையில் வேரூன்றி நிற்க உறுதுணையாக இருந்தனர். அவற்றுள் சில சாட்சிகள் இதோ உங்களுக்காக:

**1. பிரியா – ஆதம்பாக்கம், சென்னை**

எனக்குத் திருமணமாகி 3 ஆண்டுகள் முடிந்தும் குழந்தை இல்லாமல் மிகுந்த மனவேதனைக்கு உள்ளானேன். இந்நிலையில்தான் என் நண்பர் மூலமாக ஜீவமாதா ஆலயத்திற்கு வந்து குழந்தை பாக்கியத்திற்காக அன்னையிடம் மடியேந்தி கண்ணீரோடு மன்றாடினேன். இங்கு வந்து சென்ற ஒரு வருடத்திலேயே எனக்கு குழந்தை நல்லபடியாக பிறந்திருக்கின்றது. இயேசுக்கே புகழ்! மரியே வாழ்க!

**2. சூர்யா – சோழிங்கநல்லூர், சென்னை**

எனக்குத் திருமணமான மாதத்திலேயே கருவுற்றேன். மருத்துவர்களிடம் பரிசோதனைக்கு சென்றபோது அங்கு அவர்கள் குழந்தையுடன் சேர்ந்து கட்டி ஒன்று வளர்கிறது. குழந்தை வளர வளர அந்த கட்டியும் வளர்கின்றது. ஆகவே எனக்கு குழந்தை கலைந்துவிடும் அல்லது அதை கலைத்து விடுங்கள் இல்லை என்றால் பிரசவத்தின்போது ஆபத்தாக இருக்கும் என்றனர். நான் ஜீவமாதாவிடம் இடைவிடாமல் நம்பிக்கையோடு இந்த குழந்தை எனக்கு வேண்டும் என்று செபம் செய்து வந்தேன். எட்டாம் மாதத்தில் எனக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால் ஜீவமாதாவின் அருளால் எனக்கு பத்து மாதத்திற்குப் பின் சுகப்பிரசவம் நடக்க வாய்ப்பில்லை என்று கூறிய மருத்துவர்களின் கூற்றை பொய்யாக்கும் வண்ணம் சுகப்பிரசவத்தில் எனக்கு அழகிய பெண் குழந்தை ஆரோக்கியமாக பிறந்தது. அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வரும் ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள்.

# அன்னையின் அரவணைப்பில்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மா...! இது அடிமன ஆழத்தின் அன்பொலி
‘அம்மா’ – என்னும் அழகிய சொல் ஒலியில்தான்
எத்துணை இனிமை! எத்துணை மென்மை!
எத்துணை கனிவு! எத்துணை பொலிவு!
எத்துணை பொருள் பதிவு!
அம்மா, மாதாஜி, மாயி, Mom, Mummy – என
வெவ்வேறு மொழிகளிலும்
‘அம்மா’ என்னும் பொருள் தரும் சொல்லில்
‘ம’கரம் நின்று இன்னொலி தருகின்றதே!
கன்று தாய்ப்பசுவை ‘ம்மா’ என அழைக்கையில்
தாயின் மடி சுரந்து நிறைகின்றதே!
‘அம்மா’ என்னும் இனிய சொல்லுக்கு
விலங்குகளும் விதிவிலக்கல்ல

அன்னையின் உறவில்தான் அனைத்துயிரும் மலர்கின்றன
தாய் உயிரின் பணயம் குழந்தையின் பிறப்பு
தாயே அனைத்து உயிர்களின் முதற்பொருள்
தாயின் இரத்தமே...
குழந்தைக்குப் பாலாக, உணவாக,
நோய் தீர்க்கும் மருந்தாக,
உயிராக, உறவாக, உடலாகும் சதையாக
குழந்தையுடன் ஒன்றாகிறது.

அன்னையரில் முதன்மையான அன்னையாக
அன்னையவர் யாவருக்கும் அன்னையாக
ஒளிர்பவள் அன்னை மரியா
இந்த அன்னையின் உள்ளம்
தரணிக்குத் தரப்பட்ட அருள் வெள்ளம்
ஆண்டவன் அளித்த அன்பு இல்லம்
ஆண்டவனைக் காணும் இன்ப ஆலயம்
பாருலகைப் பரலோகப் பாதையில்
இட்டுச் செல்லும் விண்மீன்.

பெற்ற தாயினும் சாலப் பரிந்து
நேயர்தம் பசியினை நினைத்தூட்டுபவள் அன்னை மரியா
தானே முன் சென்று உதவும் பண்புடையாள் நம் தாய்.







இப்பாடலில் மிகச் சுருக்கமாகக் கூறப்படுகின்றது. இந்த குழந்தை இயேசு, புறவினத்தாரையும் அரவணைத்து வழிநடத்துவார். யூதர்களை மாட்சியுறச் செய்வார். அவரை நம்பி ஏற்றுக்கொள்வோரை அவரும் ஏற்றுக்கொள்வார். அவரை எதிர்ப்போர், புறக்கணிக்கப்படுவர். என்னோடு இல்லாதவர் எனக்கெதிராக இருக்கின்றான். என்னோடு சேகரித்தவன் சிதறடிக்கின்றான் என்று இயேசு பின்னால் கூறுவார் (லூக் 11:23). மரியாவையும் உற்றுநோக்கி அவர் இதயத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சிமியோன் இறைவாக்கு உரைக்கின்றார். மரியாவின் வாழ்வில் அவ்வப்போது துன்பங்கள் தொடர்ந்தாலும், அவைகளின் உச்சக்கட்டம் கல்வாரி மலையில் தன் அன்பு மகனை பலியாக இறைவனுக்கு அர்ப்பணிக்கும் போது ஆயிரம் வாட்கள் ஊடுருவப்பட்டவராய் சிலுவை அருகில் வீரத்தாயாக நின்றார்.

இறைவாக்கினர் அன்னா, நம்பிக்கையின் அடையாளமாக இங்கு காட்சி தருகிறார். அவரும் தூய ஆவியாரால் ஏவப்பட்டு மெசியாவைக் கண்டதும் அவரைப் பற்றிய நற்செய்தியை ஆலயத்தில் பறைசாற்றுகின்றார். பத்து மாதங்களுக்கு முன்பாக தனது உறவினரான எலிசபெத்தை சந்தித்து, வாழ்த்தி, அவரது இயலாமையால் உதவிகள் செய்த அனுபவத்திற்கு அன்னா இன்னும் மெருகூட்டுகின்றார். மரியாவுக்கு அன்னாவின் வார்த்தைகள் ஆறுதல் அளிக்கின்றன. அவர் எந்த வாளையும் குறிப்பிடவில்லை. இத்தகைய பெருமகிழ்வு அனுபவங்களோடு மரியா திருச்சடங்குகளை நிறைவேற்றுகின்றார். அனைத்தையும் நிறைவேற்றியப் பின் நாசரேத்துக்குச் சென்று, குழந்தையை ஞானத்தால் நிறைந்தவராய் வளர்த்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்த அர்ப்பண மனிதரை உருவாக்கும் பணியில் மூழ்குகிறார் அன்னை மரியா.

**நமது அர்ப்பணம்**

இயேசுவை கோவிலில் அர்ப்பணித்த நிகழ்வு நமக்கு பல பாடங்களை கற்றுத் தருகிறது. நாமும் இந்நாளில் எரியும் திரிகளோடு கோவிலைச்சுற்றி பவனி வருகிறோம். இன்றைய வழிபாட்டில் நற்செய்தி வாசிக்கப்படும்போது மீண்டும் திரிகளை ஏற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடந்த நிகழ்வில் ஒன்றிணைகிறோம். இயேசுவை உலகின் ஒளியாக அறிவிக்கும் இவ்வேளையில் நாமும் நமது வார்த்தையாலும், வாழ்வாலும் பிறருக்கு ஒளியாகத் திகழ்வோம். நமது அன்னை மரியா எத்துனை அழகாக திருச்சட்டங்களை நிறைவேற்றுவது கண்டு மகிழ்கின்றோம். நாமும் பத்துக்கட்டளைகள், திருஅவையின் போதனைகள், மரபுகள், இயேசுவின்

அன்புக்கட்டளைகள் ஆகியவற்றை பிரமாணிக்கமாகப் பின்பற்றி, இறைவனுக்கும் மனிதருக்கும் பிரியமுள்ளவராக, அகத்தில் சுதந்திர உணர்வை நிரம்பப்பெற்றவர்களாக கிறிஸ்தவ வாழ்வை வாழ்வோம். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் என்று இயேசு கூறுவார். உலகின் பாவம் போக்க வந்த செம்மறியைக் கோவில் அர்ப்பணிக்க அவரது பெற்றோருக்கு ஒரு ஆட்டுக்குட்டி கூட கிடைக்கவில்லை. எளிய காணிக்கையை முழுமனதுடன் கொடுக்கின்றனர். உலகிற்கே தன்னைப் பலியாக அர்ப்பணிக்க இருக்கும் மகனை, எளிய காணிக்கைகளுடன் உவந்தளிக்கின்றனர் அவரின் பெற்றோர். எத்தனை செல்வந்தர்களாக இருந்த போதிலும், எளிய மனநிலை கொண்டு, எளியவர்களோடு தோழமை உணர்வுடன் பழக இங்கு இயேசு நம்மை அழைக்கின்றார்.

தூய ஆவியானவரின் ஏவுதல்களுக்குப் பணியும் இரு முதுமை நிறை இறை மனிதர்கள் நமக்கு சிறந்த முன்மாதிரிகையாகத் திகழ்கின்றனர். இறைவன் மனிதரோடு பேசிக்கொண்டேயிருக்கின்றார். அன்றாட நிகழ்வுகள் வழியாக அவரது விருப்பத்தை, எதிர்பார்ப்பை நமக்கு அறிவுறுத்திக் கொண்டேயிருக்கின்றார். ஆழ்ந்த அமைதியில் அவரது குரலுக்குச் செவிமடுப்போம். ஆவியானவரால் நாம் வழிநடத்தப்பட நம்மை அனுமதிப்போம். எருசலேம் திருக்கோவில், யூத மக்களின் மையமாகத் திகழ்ந்தது. பரிசுத்த திருக்குடும்பம் இன்று மட்டுமல்ல, ஆண்டுதோறும் பாஸ்கா விழாவைச் சிறப்பிக்க எருசலேம் சென்று வந்தனர். சிறுவன் இயேசு தனது பன்னிரண்டு வயதில் கோவிலில் தங்கிவிட்டார். தன் தந்தையின் இல்லத்தில் இருப்பதை நினைத்து மகிழ்ந்தார். கோவிலைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வில் அவர் செயல்களைப் பார்த்த அவருடைய சீடர்கள் 'உம் இல்லத்தின்மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்' என்ற திருப்பாடலை நினைவுகூர்ந்தனர் (திபா 69). இங்கு இயேசு தனது உடலை கோவிலுக்கு ஒப்பிட்டுக் கூறினார். இவற்றை நாம் தியானிக்கும்போது, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இறைபக்தியிலும், தெய்வ பயத்திலும் வளர்க்க அழைக்கப்படுகின்றனர். திருக்கோவில்களுக்கு வர வேண்டிய முறை, வழிபாடு செய்ய வேண்டிய வழிவகைகளை இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இயேசுவை கோவிலில் அர்ப்பணிக்கும் நிகழ்வில், அவரது பணிவாழ்வு, அதன் பயனாக அவர் அனுபவிக்கும் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருள், இறைவாக்கினர் சிமியோனால் உணர்த்தப்படுகிறது. இயேசுவின் போதனைகளை விரும்பாதவர்கள் அவரை எதிர்க்கப்படும் அடையாளமாகப் பார்க்கின்றனர். இயேசுவைப் பின்பற்றும் அனைவருக்கும் இத்தகைய நிலைமை ஏற்படுவது எதார்த்தம். மெழுகுவர்த்தியை ஏந்தும் நாம் நம் வாழ்வின் சிலுவைகளையும் தாங்குவதற்கு வலிமையைப் பெற்றுக்கொள்ளும் விழாவாக இந்நாள் அமைகின்றது. திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும் இவ்வுலகப் போக்கிற்கு இறந்து, கிறிஸ்துவில் புதுவாழ்வுக்குப் பிறந்துள்ளோம். எனவே ஒவ்வொரு நாளும் அர்ப்பண வாழ்வு வாழ்வது நமது கிறிஸ்தவக் கடமை. பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருப்பது கண்டு மகிழ்வோம். உண்மையான அர்ப்பணம் நாளும் நம்மில் மலர்வதைப் பார்த்து அன்னையும் அவர்தம் அன்பு மகனும் அருளுக்கு மேல் அருளை நம்மீது பொழிவர்.





திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை, ஒப்புரவு, நோயில் பூசுதல், குருத்துவம் மற்றும் திருமணம் என்னும் ஏழு திருவருட்சாதனங்களில் திருமணம் என்னும் அருட்சாதனம் மட்டும் தந்தையாகிய கடவுளால் தொடக்கத்திலேயே உருவாக்கப்பட்ட அருட்சாதனம். மற்ற ஆறு அருட்சாதனங்களும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் அவருடைய பணிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. தொடக்கத்தில் தந்தையாகிய இறைவன் எல்லாவற்றையும் படைத்துவிட்டு மனிதனைப் படைக்கின்றார். பின் மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல என்று நினைத்து அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணைப் படைத்து அவர்களை கணவன் மனைவியாக வாழப்பணிக்கின்றார். எப்பொழுது ஏவாள் ஆதாமுக்கு துணையாக படைக்கப்பட்டாளோ அன்றே கடவுள் திருமணம் என்னும் அருட்சாதனத்தை ஏற்படுத்திவிட்டார். அன்றிலிருந்து இன்று வரை எல்லா குடும்பங்களும் கடவுளுடைய திட்டத்தின்படியும், விருப்பத்தின்படியும் உருவாகின்றன. ஒரு பையனுக்கோ, பெண்ணுக்கோ பெற்றோர் எத்தனை வரன் பார்த்தாலும் கடவுள் யாருக்கு யாரை முன்குறித்து வைத்திருக்கின்றாரோ அவர்கள்தான் திருமணம் என்னும் பந்தத்தில் இணைக்கப்படுகின்றார்கள். அதனால்தான், "இன்னாருக்கு இன்னாரென்று எழுதி வைத்தானே தேவன் அன்று" என்றும், திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது" என்றும் நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

திருமணத்தின் வழியாக குடும்பத்தை உருவாக்கிய இறைவன் குடும்ப வாழ்வை மிகவும் நேசிக்கிறார், மதிக்கிறார். அதனால்தான் தன்னுடைய ஒரே திருமகனை இந்த உலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்தபொழுது கடவுள் தம் மகனை ஒரு குடும்பத்தில் பிறக்கச் செய்கின்றார். அவர் நினைத்திருந்தால் எதாவது ஒரு வழியில் தம் மகனை இவ்வுலகிற்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் குடும்பத்தில் பிறக்கச் செய்வதன் வழியாக குடும்பத்தின் மீது தனக்கு இருக்கின்ற அன்பையும், மதிப்பையும் கடவுள் வெளிப்படுத்துகின்றார்.

இந்த உலகம் தோன்றியது முதல் இந்நாள்வரை இவ்வுலகில் எத்தனையோ குடும்பங்கள் தோன்றியிருக்கின்றன, இன்னும் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அன்னை மரியா, தூய யோசேப்பு, குழந்தை இயேசு வாழ்ந்த குடும்பத்தைத்தான் நம் திருஅவையானது திருக்குடும்பம் என்று அழைக்கின்றது. "திரு" என்ற தமிழ் வார்த்தைக்கு உயர்ந்த, மேன்மையான, உன்னதமான, மதிப்பிற்குரிய, புனிதமான என்று பல விளக்கங்கள் உண்டு. தாய் மரியாள், தூய யோசேப்பு, குழந்தை இயேசு வாழ்ந்த குடும்பம் உயர்ந்த, மேன்மையான, உன்னதமான, மதிப்பிற்குரிய, புனிதமான குடும்பமாக இருந்தது. இந்த திருக்குடும்பத்தைப் பின்பற்றி நம் கத்தோலிக்கக் குடும்பங்களும் திருக்குடும்பமாக வாழ வேண்டும் என்று திருஅவை நமக்கு அழைப்புக் கொடுக்கின்றது. நம் கத்தோலிக்க குடும்ப வாழ்வில் தாய் மரியா எத்தகைய பங்காற்றுகின்றார்கள், மரியாளை நாம் எப்படி பின்பற்றி நம் குடும்ப வாழ்வையும் திருக்குடும்ப வாழ்வாக மாற்ற முடியும் என்று வருகின்ற மாதங்களில் இக்கட்டுரையில் நாம் சிந்திப்போம்.

**வாழ்வு மலரும்....**



# குடும்ப வாழ்வில் மரியா

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச,
சோழிங்கநல்லூர், சென்னை

குடும்பம் ஒரு கோவில் என்று சொல்வார்கள். காரணம் கோவிலில் மன அமைதியும், மன நிம்மதியும் கிடைக்கும். அதேபால குடும்பம் என்பது மன அமைதியும், நிம்மதியும் தருகின்ற இடமாகும். குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்றும் சொல்வார்கள். பல்கலைக்கழகத்தில் பல திறமைகளை வளர்ப்பதற்கான பல துறைகள் இருக்கும். எல்லாம் சேர்ந்த ஒரு கலவையாக ஒரே தலைமையின் கீழ் இயங்கும். அதேபோல குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள் என்று பலர் இருப்பார்கள். பல திறமைகளும், பல குணங்களும், பல சிந்தனைகளும், பல எண்ணங்களும் கொண்ட பலர் இணைந்து ஒவ்வொருவரும் தங்கள் கடமையை சரிவர செய்கின்றபோது அந்த குடும்பம் வளர்ச்சியை நோக்கிய குடும்பமாக இருக்கும். “குடும்பம் என்பது மண்மீது காணப்படும் மோட்சம்” என்று ரஷ்ய பழமொழி ஒன்று கூறுகின்றது. நாம் யாரும் மோட்சத்தை நேரில் சென்று பார்த்ததில்லை. மாறாக மோட்சத்தைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். மோட்சத்தைப் பற்றி நமக்கு சொன்னவர்களும் மோட்சத்தை நேரில் சென்று பார்த்து திரும்பியவர்கள் அல்ல. மோட்சத்தில் மகிழ்ச்சி, அமைதி, பேரின்பம் இருக்கும் என்று நாம் நம்புகின்றோம். அதேபோல நம் குடும்பத்திலும் மகிழ்ச்சி, அமைதி, பேரின்பம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, மோட்சத்தில் இறைவனுடைய பிரசன்னம் இருக்கும் அதேபோல குடும்பத்திலும் இறைவனுடைய பிரசன்னம் இருக்க வேண்டும். ஆக, குடும்பம் மண்மீது காணப்படும் மோட்சம் என்று சொல்லுகின்றபோது மோட்சத்தில் இருக்கும் மகிழ்ச்சி, பேரின்பம், அமைதி, இறை பிரசன்னம் அனைத்தும் நம் குடும்பத்திலும் இருக்க வேண்டும். இவையனைத்தும் இருக்கும் பட்சத்தில்தான் நம் குடும்பம் மோட்சமாக இருக்கமுடியும்.



குடும்பம் என்பது கடவுளால் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் கொடை. திருமணம் என்னும் திருவருட்சாதனத்தின் வழியாக கடவுள் குடும்பங்களை உருவாக்குகின்றார். நம் கத்தோலிக்க திருஅவையில் இருக்கின்ற





# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... 38

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.



## தூய வியாகுல அன்னை ஆலயம் திண்டிவனம்

தமிழக வரலாற்றில் நீங்கா இடம் கொண்ட ஊர் திண்டிவனம் ஆகும். சங்க காலத்தில் தொடங்கி நவீன காலம் வரை நம் அனைவரின் பயணத்தில் தவிர்க்க முடியாத ஊராக திண்டிவனம் அமைந்துள்ளது. திண்டிவனத்தில் பணிகள் இல்லையென்றாலும் தென் தமிழகம் மற்றும் மேற்கு தமிழகத்திலிருந்து வருபவர்கள் திண்டிவனத்தைக் கடக்காமல் தமிழகத்தின் தலைநகரை வந்தடைய முடியாது.

தமிழகத்தில் இயேசுவின் மதிப்பீடுகளை போதிக்க மறைபோதகர்கள் வந்து ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகிறது. அவர்களின் பணியும், வாழ்வும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கடல்வழி கண்டுபிடிக்கப்பட்டப் பிறகு, கிறிஸ்தவத்தை போதிக்க வந்தவர்களில் புனித பிரான்சிஸ் சவேரியார் புதுச்சேரி பகுதிக்கு வந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. பிரெஞ்சு நாட்டை சேர்ந்த கப்பூச்சியன் துறவியர் கி.பி. 1674ம் ஆண்டும், இயேசு சபையினர் கி.பி. 1688ம் ஆண்டும் தாய்லாந்திலுள்ள சியாமிலிருந்து வந்தடைந்தனர். ஐரோப்பிய மக்களுக்கு கப்புச்சியன் துறவியரும், இந்திய மக்களுக்கு இயேசு சபையினரும் பணிகளை செய்தனர். பரந்து விரிந்த கர்னாடிக் மிசன் இயேசு சபையினரால் தொடங்கப்பட்டு புதுச்சேரியை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டது. கி.பி. 1773ம் ஆண்டு இயேசு சபை தடைசெய்யப்படவே, உரோமை விசுவாச பரப்பு ஆணையத்தால் கி.பி. 1776ம் ஆண்டு புதுச்சேரி மறைப்பணி தளமானது பாரீஸ் மறைபோதக சபையின் பராமரிப்பில் அளிக்கப்பட்டது. இக்காலக்கட்டங்களில் பாரீஸ் மறைபோதக குருக்கள் தென்னிந்தியா முழுவதும் பணியாற்றினர். அவர்களில் பெரும்பாலானோர் திண்டிவனம் வழியாகவே பயணித்தனர். ஆனால், திண்டிவனத்தில் அக்காலக்கட்டங்களில் கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. இறைவனின் திட்டத்தில் இருந்த திண்டிவனம், கிறிஸ்தவ விசுவாசத்தை பெற இன்னொரு நூற்றாண்டு காத்திருக்க வேண்டியதாயிற்று.

கி.பி. 1876ஆம் ஆண்டு ஜனவரியில் அருட்பணி போரே அவர்கள் அருட்பணி புர்காத் அடிகளாருடன் திண்டிவனம் வந்தடைந்தார். அப்போது திண்டிவனம் தாசில்தாராக இருந்த ஆங்கிலோ இந்திய கத்தோலிக்கரான திரு. டிக் என்பவரின் உதவியுடனும், ஆலோசனையுடனும் திண்டிவனம் நகரின் வடக்கு எல்லையிலிருந்த ஒரு நிலத்தை வாங்கினர். எட்டே நாட்களில் ஒரு ஓலைக்கூரைக் கட்டிடத்தை கட்டினர். அன்றே, திண்டிவனம் பங்கு தோன்றியது. அருட்பணி போரே அவர்கள்தான் திண்டிவனம் பங்கின் வித்தாகவும், முதல் பங்குத் தந்தையாகவும் விளங்கினார். வியாகுல அன்னைக்கு ஒப்புக்

கொடுக்கப்பட்ட இச்சிற்றாலயம், சிலுவையடியில் நின்ற அன்னை மரியாவை பிரதிபலிக்க அருட்பணி போரே அவர்களுக்கு தொடர்ந்து கற்றுத்தந்து கொண்டே இருந்தது எனலாம். கி.பி. 1877ஆம் ஆண்டு தென்னாற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் கொடிய காலரா பரவியது. அருட்பணி. போரே அவர்கள் தம் மந்தையின் துன்பங்களில் பங்கேற்று, அவர்களுக்கு மருத்துவ உதவிகளும், உணவு பொருட்களும் வழங்கி ஒரு நல்லாயனாக அவர்களுடன் துன்பங்களை அனுபவித்தார். தம் மக்களுக்கு அரசின் உதவிகளையும் பெற்றுத் தந்தார். ஆண்டவரைத் தொழ ஆலயம் கட்டுவதா? அல்லது துன்புறும் மக்களின் துயரை நீக்குவதா? என்கிற போராட்டத்தில் அருட்பணி. போரே வாழும் ஆலங்களாகிய மக்களைக் காப்பாற்றுவதுதான் இன்றியமையாதது என்றுணர்ந்து மக்களை நோயிலிருந்து காப்பாற்றவும், பாதுகாக்கவும் ஆங்கிலேய அரசுடன் இணைந்து பணியாற்றினார். போரே அடிகளாருக்குப் பின் பங்குத் தந்தையாக கி.பி. 1878ல் பொறுப்பேற்ற அருட்பணி. பிளேரி அடிகளார் அவர்கள் இன்றுள்ள வியாகுல அன்னை கோயில் வளாகத்தை வாங்கினார். தாம் வாங்கிய நிலத்தில் ஒரு சிறு கோவிலையும் அமைத்தார். கி.பி. 1885ஆம் ஆண்டு இறுதியில் அருட்பணி. போல்தேத் திண்டிவனம் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் காலத்தில், கிறிஸ்தவத்திற்கு எதிராக இருந்தவர்களால், பங்கு இல்லம் முழுவதும் தீயிட்டு கொளுத்தப்பட்டது. பங்கின் ஆவணங்கள் நாசமாயின. ஆண்டுகள் உருண்டோடின, பல்வேறு தேவைகளின் பொருட்டு பங்குப் பணியாளர்களும் மாற்றம் பெற்றனர். ஆயன் அடிக்கடி மாற ஆடுகள் திசைதெரியாமல் பயணித்தன. உடல் நலம் தேற கி.பி. 1878ல் பிரான்சு தேசம் சென்ற அருட்பணி. போரே, கி.பி. 1889ஆம் ஆண்டு புதுச்சேரி திரும்பினார். தம் வாஞ்சைக்குரிய பங்காகிய திண்டிவனத்தின் பங்குப்பணியாராக கி.பி. 1889ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொறுப்பேற்றார். ஆனால், பங்கு இருந்த நிலையைக் கண்டு நிலைகுலைந்து போனார். பணியார்களின் அடிக்கடி மாற்றத்தின் காரணத்தினால், பெரும்பாலான மக்கள் விசுவாசமிழந்து தங்கள் பழைய நிலைக்கு மாறியிருந்தனர். தனது ஆர்வமிக்க மறைபணியால் இழந்த மக்களை மீட்டெடுத்தார். திண்டிவனத்தில் தூய வியாகுல அன்னைக்கு ஓர் அழகிய ஆலயம் கட்ட வேண்டும் என்பது அவருடைய பேராவலாக இருந்தது. ஆனால், இறைமக்களாகிய உயிருள்ள ஆலயத்தைக் கட்டியெழுப்புவதிலேயே அவர் எப்பொழுதும் முனைப்புடன் இருந்தார்.



கி.பி. 1895ஆம் ஆண்டு கோம்ப் அடிகளார் புதிய பங்குத் தந்தையாக பொறுப்பேற்றுக் கொண்டார். இவருடைய முயற்சிகளுக்கு பேராயர் ஜோசப் அடோல்ப் கான்தி அனுமதி வழங்கினார். கி.பி. 1896ஆம் ஆண்டு பிரான்சு நாட்டிலிருந்து குளுனி புனித சூசையப்பர் சபையினரின் உதவியோடு திண்டிவனத்தில் மருத்துவமனை நிறுவினார். தொடர்ந்து கி.பி. 1898ஆம் ஆண்டு ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கான இல்லத்தை ஏற்படுத்தினார். கி.பி. 1899ல் குளுனி தொடக்கப்பள்ளி, கி.பி. 1900 ஆதரவற்ற சிறுவர் இல்லம் மற்றும் கி.பி. 1904ல்





தாங்கிய ஏடாகக் கருதப்படும்

- மேலும் மரியா பற்றி புதிய கோட்பாடுகளை திருச்சங்கம் அறிவிக்கலாம் என்ற எண்ணத்தை அது ஏற்படுத்த வழிவகுக்கும்
- இந்த வகையில் மரியாவை திருஅவையின் முதன்மையான உறுப்பினர் எனக் கூறுவது பொருத்தமானது.
- மேய்ப்புப் பணி நோக்கில் மரியா வணக்கம் பற்றிய சரியான புரிதலை இது ஏற்படுத்த உதவும்
- மேலும் இது கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு ஏற்புடைய ஒன்றாய் இருக்கும்

இவரின் இத்தகைய கருத்துக்களுக்கு ஜெர்மன் மற்றும் பல ஐரோப்பிய நாட்டு ஆயர்கள் ஆதரவளித்தனர். மரியின் ஊழியர் சபையைச் சார்ந்த கபிரியேல் ரொஸ்கினி (Gabriele Roschini OSM) மற்றும் 'மரியானும்' மரியியல் கல்லூரி பேராசிரியர்களும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க பணியிலே சிறப்பாக மரியா பற்றிய விவாதத்தில் பங்கேற்றனர். மரியானும் பாப்பிறை இறையியல் கல்லூரி வளாகம் இந்த வரலாற்று சிறப்புமிக்க வாதங்கள், பிரதிவாதங்கள், இறையியல் கருத்துக்கள் மெருகூட்டப்பட்ட இடமாக அந்நாட்களில் செயல்பட்டது என்பதை மரியின் ஊழியனாக நான் பெருமை கொள்கிறேன்.

இந்த இரு குழுக்களின் விவாதத்திற்குப் பின்பு 29 அக்டோபர் 1963 அன்று திருச்சங்கம் அமர்வில் வாக்கு எடுக்கப்பட்டது. இதில் 1114 பேர் மரியா பற்றி ஒரு தனி ஏடு வேண்டாம் என்றும் 1074 பேர் தனி ஏடு வேண்டும் என்றும் வாக்களித்தனர். மொத்த வாக்காளர்கள் 2193 அதில் செல்லாதவை 5. ஆக 40 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் மரியா பற்றிய போதனைகள் 'திருஅவை' எனும் ஏட்டுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது. இதன் பின்பு வெவ்வேறு அமர்வுகளில் 5 முறை பல்வேறு படிவங்கள் வழங்கப்பட்டு மரியா பற்றிய போதனைகள் மாற்றப்பட்டன. இறுதியாக இன்று உள்ள ஏடு 19 நவம்பர் 1964 ல் நடந்த வாக்களிப்பின் போது 2096 பேர் சார்பாகவும் 23 பேர் அதற்கு எதிர்ப்பும் தெரிவித்தனர். 40 ஓட்டு வித்தியாசத்தில் தனி ஏடு வேண்டாம் என்று வெற்றிபெற்ற வாதம், அனைத்து சங்கத் தலைவர்களின் ஆதரவோடு 2000 க்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது ஒருமித்த கத்தோலிக்க திருஅவையின் ஒரே குரலாகக் கருதப்படுகிறது. 1964 நவம்பர் 21 ஆம் தேதி, மரியா காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாளில் திருத்தந்தை ஆறாம் பவுல் அறிவித்தார்.

இன்று கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அனைவரும் படித்து அறிந்துகொள்ள வேண்டிய பகுதி 2 ஆம் வத்திக்கான் திருச்சங்கத்தின் 'திருஅவை' என்ற ஏட்டின் 8 ஆம் அதிகாரம் எண் 52 லிருந்து 69 வரை. கத்தோலிக்கர் அல்லாத பிரிவினை சகோதரர்களும் படித்து உணர்ந்துகொள்ள வேண்டிய பகுதி இது. இதனை படிப்பவர்கள் மரியாவைப் பற்றிய உண்மையான போதனையை கத்தோலிக்க திருஅவை எவ்வாறு போதிக்கின்றது என்பதை உணர முடியும். அடுத்த இதழில் மரியா பற்றிய 2 ஆம் வத்திக்கான் சங்க போதனைகளை அறிவோம்.

**சிந்தனை பெருகும்....**

இயேசுவுடன் இணை ஒப்புமை எனும் மரியியல் மரபு தத்துவங்களே பெரிதும் அதில் தலைதூக்கி நின்றன.

மரியா வணக்கம் பற்றி மறுமலர்ச்சி சிந்தனை போக்கு கொண்ட சங்கத் தந்தையர்கள் பலர் அந்த தயாரிப்பு ஏட்டினை ஏற்க மறுத்தனர். அவர்கள் ஏற்க மறுத்தது அந்த ஏட்டின் மரியியல் கண்ணோக்கையும் கருத்துக்களையும் மட்டுமன்று, மாறாக மரியாவைப் பற்றி தனியொரு ஏடு வெளியிடுவதைவிட மரியாவை திருஅவையுடன் தொடர்புபடுத்தி பார்க்கும் வகையில் அதனை திருஅவை எனும் ஏட்டுடன் இணைத்து வெளியிடுவதே பொருளும் பொருத்தமும் உள்ளது என்றனர். இந்த மறுமலர்ச்சி கருத்திற்கு எதிராக மரபு சிந்தனைகளைக் கொண்ட பல சங்கத் தந்தையர்கள் மரியா பற்றி தனியொரு ஏடு தேவை என்று வலியுறுத்தினர். இவ்வாறு சங்க காலத்தில் மரியா பற்றிய மரபு கண்ணோட்டமும் மறுமலர்ச்சி சிந்தனைகளும் மோதிக்கொண்டன. இந்த வெவ்வேறு சிந்தனைகளை இரண்டு உதாரணங்களுடன் பார்ப்போம்.

**1. கர்தினால் சாந்தோஸ் ரு∴பினியின் வாதம் (Card. Santos Rufini – Archbishop of Milan)**

- மரியா பற்றி மரபு சிந்தனை
- மரியா பற்றி தனி ஏடு வேண்டும்
- மரியா ஒரு இடைநிலையாளர்
- மரியா ஓர் இணைமீட்பர் என்ற கோட்பாட்டை திருச்சங்கம் அறிவிக்க வேண்டும்
- மரியா பற்றிய படிப்பினைகளை ‘திருஅவை’ என்ற ஏட்டுடன் இணைக்கக் கூடாது. காரணம் திருஅவை ஏடானது இறைமக்கள், திருஅவையின் ஆட்சியமைப்பு, பொதுநிலையினர், துறவிகள், புனிதத்திற்கான அழைப்பு போன்றவற்றை விவரிக்கின்றது. மரியாவை இந்த ஏட்டுடன் இணைப்பது என்பது அவரைக் குறைத்து மதிப்பதற்கு இட்டுச் செல்லும் என்ற பல சிந்தனைகளை முன்வைத்தார்.

இவருடன் சேர்ந்து கர்தினால் ஒத்தாவியனி (Card. Ottaiviani) தலைமையில் இத்தாலி, ஸ்பெயின் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாட்டு ஆயர்கள் மரியா பற்றிய போதனைகளை ‘திருஅவை’ ஏட்டில் சேர்ப்பது என்பது மரியாவிற்கு எதிரான வாக்களிப்பு என்று கூறினர்.

**2. கர்தினால் பிரான்சிஸ் கோனிக்கின் வாதம் (Card. Francis Konig)**

- மரியா பற்றிய படிப்பினைகளை ‘திருஅவை’ ஏட்டுடன் இணைக்க வேண்டும் என்றார். திருஅவை மீட்பின் கருவியாய் இருப்பதால் மரியா மீட்புத்திட்டத்தில் முக்கிய பங்கு ஆற்றியவர் என காணும்போது, மரியா பற்றிய போதனைகள் ‘திருஅவை’ ஏட்டுடன் இணைக்கப்படுவதுதான் பொருத்தமானது என்றார்.
- ‘திருஅவை’ என்ற ஏட்டுடன் இணைப்பது சங்கத்தின் மையக்கருத்துடன் இயைந்த ஒன்று. அவ்வாறு இல்லாது தனி ஏடு உருவானால் அது வரலாற்றில் உருவான மிகைப்படுத்தப்பட்ட மரியா பற்றிய சிந்தனைகளைத்







புனித சூசையப்பர் தொழிற்பள்ளி முதலியவற்றை ஏற்படுத்தினார். பல்வேறு நிறுவனங்கள் நிறுவி, கத்தோலிக்க கல்வியையும், மருத்துவ சேவைகளையும் முன்னிறுத்திய அருட்பணி. கோம்ப் அவர்கள், தன் மக்களின் ஆன்மீக தேவைகளுக்காக பெரிய ஆலயம் தேவை என்பதையும் உணராமலில்லை. எனவே, கி.பி. 1896ஆம் ஆண்டு முதலே ஆலய கட்டுமான பணிகளுக்கான பொருட்களை சேகரிக்க ஆரம்பித்தார். கி.பி. 1898ல் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கடக்காலும் போடப்பட்டது.

கி.பி. 1908ஆம் ஆண்டு அருட்பணி. ழியோர் அடிகளார் திண்டிவனம் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றார். அவர் தனது 25 வயதில் பங்குப் பணியாளர் ஆனார். உறுதியான உடல் கட்டும், பலசாலியுமான அருட்பணி. ழியோர் தனது மிஷன் முழுவதும் சைக்கிளிலேயே பயணித்து பணிசெய்தார். கி.பி. 1911ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பேராயர் ஜோசப் அடோல்ப் கான்தி அவர்கள் பங்கு விசாரணைக்காக திண்டிவனம் வந்தார். அருட்பணி. கோம்ப் அவர்களால் ஆலயத்திற்காக போடப்பட்டிருந்த மாபெரும் அடித்தளத்தைப் பார்வையிட்டார். உடனடியாக, ஆலய கட்டுமான பணிகளை தொடர பேராயர் ஆணையிட, கட்டிடக்கலை பயின்றிருந்த ழியோர் அடிகளார் செய்ய வேண்டிய பணிகளை துல்லியமாகத் திட்டமிட்டார்.

அருட்பணி. ழியோர் கி.பி 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் நாள் பாரீஸில் உள்ள தங்களது தலைமையகத்துக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தனக்கு முன் பணியாற்றிய அருட்பணி. கோம்ப் அவர்களின் முயற்சியினால் தொடங்கப்பட்ட ஆலயப் பணிகள் கடக்கால் அளவிலேயே இருப்பதையும், திண்டிவனம் இறைமக்களுக்கு ஒரு நல்ல ஆலயம் தேவை என்பதையும் விவரித்து எழுதினார். அருட்பணி. கோம்ப் அவர்களின் சீரிய எண்ணத்தை, அதாவது, ஆலய கட்டிடத்தைவிட உயிருள்ள ஆலயங்களாகிய இம்மக்களின் ஆன்மீக, பொருளாதார, கல்வி தேவைகளை முன்னிறுத்துவதின் அவசியத்தை, பாராட்டி எழுதினார். அதே நேரத்தில் எண்ணிக்கையில் அதிகமாகும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் விசுவாச வளர்ச்சிக்கு ஆலயத்தின் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார்.



கி.பி. 1912ஆம் ஆண்டு தேவையான பொருட்கள் சேகரிக்கப்-பட்டப்பின், ழியோர் அடிகளார் மேற்பார்வையில் செங்கல் சூளைகள் போடப்பட்டன. சாந்து அரைப்பதற்கான வட்ட வடிவில் ஆலை அமைக்கப்பட்டது. மணலும் சுண்ணாம்பும் தண்ணீரும் கலந்த கலவை மீது பெரிய சக்கரம் போன்ற வட்ட வடிவ கருங்கல்லை இழுத்துச் சென்று அரைப்பதற்காக இரண்டு காளைகள்

வாங்கப்பட்டன. சுண்ணாம்பும் சாந்தும் அரைக்கப்பட்டது. கி.பி 1913ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆலயத்தின் சுவர்கள் கட்டும் பணி தொடங்கியது. மழைக் காலத்தில் பணிகள் நிறுத்தப்பட்டு தேவையான பணமும், பொருளும் சேகரிக்கப்பட்டன.



கி.பி. 1914ஆம் ஆண்டில் மீண்டும் செங்கல் சூளைகள் போடப்பட்டன. ஆலய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தன. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ழியேர் அடிகளார் சாரளத்தில் ஏறி நின்று கொண்டு, கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்தார். தூண்களில் வரவேண்டிய அழகிய வேலைப்பாடுகளுக்கு ஏற்றவாறு செங்கற்களை வைத்துக் கட்டக் கற்பித்தார்.

அருட்பணி தாமஸ் கவான் ட.்.பி அவர்கள் கி.பி. 1915ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எழுதிய கடிதம் ழியேர் அடிகளாரின் அர்ப்பணிப்பு மிக்க வாழ்விற்கு சான்றாக உள்ளது. அக்கடிதத்தில் அருட்பணி. தாமஸ் பின்வருமாறு எழுதுகிறார், “கட்டடப் பணிகளில் நிபுணரான ழியேர் அடிகளார் திண்டிவனம் ஆலயப்பணிகள் ஒவ்வொன்றையும் துல்லியமாகத் திட்டமிட்டார். ஒவ்வொரு கல்லும் அவருடைய நேரடியான மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டது. சுண்ணாம்பும் சாந்தும் அவ்வாறே தயாரிக்கப்பட்டது. ழியேர் அடிகளார் இளம் வயதினர்: உறுதியான உடல் கட்டு கொண்டவர்: பலசாலியும் கூட. வெயில் என்றும் மழையென்றும் பாராமல், கொத்தனார்களுடனும், கூலியாட்களுடனும் சேர்ந்து அவரும் வேலை செய்தார். கல் சுமந்தார், சுண்ணாம்பு சாந்து சுமந்தார். வேலைகளை கண்ணும்கருத்துமாக மேற்பார்வை செய்தார். ஆலயத்தின் சுவர்கள் வேகமாக எழும்பின. சவுக்கு மரங்களால் சாரளம் கட்டப்பட்டு வேலைகள் தொடர்ந்தன.” ஆனால், இடைவிடாத கடினமான பணிகளால் ழியேர் அடிகளார் சோர்ந்து போனார். கி.பி. 1914ஆம் ஆண்டு ஜீலை 19ஆம் நாள் ழியேர் அடிகளார் வழக்கம் போல் சாரளத்தில் ஏறி பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். கோர்னஸ் வரை சுவர்கள் எழும்பிக் கொண்டிருந்தன. கொளுத்தும் வெயிலில் பல மணிநேரம் நின்று வேலைகளைக் கண்காணித்த அவர் திடீரென மயங்கிக்







பக்தி முறைகளிலும் அது ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை? அதன் நிறை குறைகள் எவை? என சற்று சிந்திக்க முயல்கிறது இக்கட்டுரை.

**A. சங்கத்திற்கு முன்**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திருஅவையில் பல இயக்கங்கள் உருவாகி வளர்ந்து வந்தன.

**1. விவிலிய இயக்கம்**

இஸ்ரேல் நாட்டில் சாக்கடல் அருகில் உள்ள கும்ரன் (Qumran) என்ற குகைகளில் 1947 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல்கள் மற்றும் பல எபிரேய பப்பிரஸ் நூல்கள் விவிலிய இயக்கத்தின் தொடக்கமாக இருந்தது. உரோமை நகரில் உள்ள பிபிலிக்கம் மற்றம் ஐரோப்பா முழுவதும் உள்ள கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்டாண்ஸ் பல்கலைக் கழகங்கள் பல விவிலிய ஆய்வுகளை மேற்கொண்டு புதிய விளக்கங்களை திருஅவைக்கு கொடுத்தன.

**2. திருவழிபாட்டு இயக்கம்**

திருவழிபாடு ஒரு அருட்சாதனம் என்ற நிலையிலிருந்து மாறி குருக்களின் அதிகார மையமாக மாறிவிட்ட நிலையில் மீண்டும் திருவழிபாடு மக்களின் வழிபாடாக மாற இவ்வியக்கம் முயன்றது

**3. நற்செய்தி இயக்கம்**

நற்செய்தி அறிவிப்பதே திருஅவையின் பணி. நற்செய்தி அறிவிப்பு வெறும் முழக்கமாக இல்லாமல் வாழ்வின் மையமாக்க இவ்வியக்கம் முயன்றது.

**4. கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம்**

பல்வேறு பிரிவுகளாக வாழ்கின்ற பிளவுபட்ட திருஅவையை மீண்டும் ஒன்றிணையவும், ஒன்றித்து செயல்படவும் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

**5. மரியா இயக்கம்**

மரியா பற்றிய பல புதிய சிந்தனைகள் உருவாகின. அவைகள் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டும் தொடக்க கால தந்தையர்களின் படிப்பினைகளை மையப்படுத்தியாகவும் இருக்க வேண்டும். மேலும் மரியியல் கருத்துக்கள் மரியா மையமாக இல்லாமல் கிறிஸ்து மையமாக இருக்க வேண்டும் என்ற ஆழமான கருத்தை முன் வைத்தது இவ்வியக்கம்.

**B. சங்கத்தின் போது**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் துவங்கியபோது, திருஅவையானது மரியாவைப் பற்றிய மற்றொரு விசுவாசக் கோட்பாட்டை அதாவது மரியா இடைநிலையாளர் (Mediatrix – Mediator), உடன் இரட்சகி (Co-redemptrix – Co-redeemer) என்ற உண்மையை அறிவிக்கும் என்று மரியா பக்தர்கள் எதிர்பார்த்தனர். சங்கத் தயாரிப்புக்கு முன் மரியா பற்றிய புதிய விசுவாசக் கோட்பாடு எதனையும் அறிக்கையிட முன்னேற்பாடு செய்யவில்லை என்றாலும் மரியா பற்றி தனி ஏடு ஒன்று தயாரித்திருந்தது. அது பெருமளவுக்கு மரபு மரியியல் பாணியிலே அமைந்திருந்தது. தகுதியுடமை, தனித்தன்மை,

8

# மரியா - கடவுளின் கடிதம்

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



## மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா

மரபு சிந்தனையில் மரியா என்ற தலைப்பில் கடந்த 7 மாதங்களாக வெளிவந்த கட்டுரைகளில் சிந்தித்து வந்தோம். இப்போது மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா என்ற தலைப்பில் இனி வருகின்ற இதழ்களில் சிந்திக்க இருக்கின்றோம். மரபு சிந்தனைகளின் மூலம் இருந்த பல செயல் முறைகள் மறுமலர்ச்சி காலத்தில் மறு ஆய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. கிறிஸ்தவர்களுக்கு மறுமலர்ச்சி காலம் என்பது இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற காலமாகும். இன்று திருஅவையில் பல்வேறு புதிய பார்வைகளும் பாதைகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமாகும். மரபு கிறிஸ்தவம் தனது வாழ்க்கை முறையை இன்றைய சூழலுக்கேற்றவாறு நற்செய்தியின் ஒளியில் தன்னையும் தனது பணியையும் புதுப்பித்துக்கொண்டு மாறி வருகின்றது. இது வாழும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு நல்லதொரு அறிகுறி மட்டுமன்று இதுவே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்திலிருந்து திருஅவை தொடங்கும் புதியதொரு நம்பிக்கை பயணமாகவும் அமைகின்றது.

இவ்வாறு மரபு வழி சிந்தனைகளில் அதிகமாக மறு ஆய்விற்கும் மாற்றத்திற்கும் இன்று உள்ளாகும் துறைகளில் ஒன்று மரியியல் என்றால் அது மிகையாகாது. திருஅவையின் வாழ்விலும் வணக்கத்திலும் மரியாவுக்குரிய இடம் எது என மறுமலர்ச்சியின் பொதுச்சங்கமாகிய இரண்டாம் வத்திக்கான் சங்கம் மீண்டும் சிந்தித்தது. இந்த சங்கத்தின் போது மரபு சிந்தனைகளுக்கு மறுமலர்ச்சிக் கருத்துக்களுக்கும் ஆழமான மோதல்கள் ஏற்பட்டன. இறுதியாக மரியா பற்றிய நமது சிந்தனைகளுக்கும் பக்தி முறைகளுக்கும் அடிப்படையாக இன்று நாம் பின்பற்ற வேண்டிய புதிய அணுகுமுறைகளையும் வரையறைகளையும் நமக்கு தொகுத்து வழங்கியுள்ளது. 'திருஅவை' என்னும் சங்க ஏட்டில் கடைசியாக இருக்கும் 8 ஆம் அதிகாரத்தில் மரியாவைப் பற்றிய சிந்தனைகளை நாம் காணலாம்.

சங்க படிப்பினைகளையும் அதனை தொடர்ந்து வளர்ந்துள்ள மறுமலர்ச்சி மரியியலும் வழங்கும் புதிய பார்வை எது? மரியாள் பற்றிய நமது நம்பிக்கையிலும்





கீழே சாய்ந்தார். உடனடியாக, பங்குத் தந்தை இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். ஓரளவு உடல் நலம் தேறிய அவர், 23ஆம் தேதி மீண்டும் காய்ச்சலால் வேதனையுற்றார். 24ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு தம் அருகில் இருந்தவர்களிடம், "நாளை காலை புதுச்சேரி அல்லது பெங்களூர் சென்று மருத்துவரைப் பார்க்க வேண்டும் எனக்கு உடல்நிலை கஷ்டமாக இருக்கிறது" என்றார். அன்று இரவு காய்ச்சல் அதிகமாக அவர் நல்ல நினைவுடன் நோயில் பூசுதலும், இறுதிப்பயண நற்கருணையும் பெற்றுக் கொண்டார். சில வினாடிகளிலேயே இறைவனின் கரங்களில் தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார். திண்டிவனம் வரலாற்றில் மிகச் சோகமான நாளாக இது அமைந்தது. வியாகுல அன்னைக்கு ஆலயம் எழுப்ப முழு முயற்சி எடுத்து அதில் ஓரளவு வெற்றியும் கண்ட அடிகளார் இறைவனடிச் சேர்ந்தபோது அவருக்கு வயது 31.

தந்தையவர்கள் மறைந்த ஒரு வாரத்திற்குள் முதல் உலகப் போர் தொடங்கியது. இப்போரானது கி.பி. 1914 முதல் கி.பி. 1918 வரை நடைபெற்றது. இக்காலக்கட்டத்தில், ழியோர் அடிகளாரின் மறைவுக்குப் பின் அருட்பணி. கிரேவர் அவர்கள் திண்டிவனத்தின் பங்குப் பணியாளராக பொறுப்பேற்று கி.பி. 1922 வரை பணியாற்றினார். இறைவன் ஆலய பணிகளை நிறைவுபெற மற்றொரு பணியாளரை அனுப்பினார்.

அருட்பணி. தாமஸ் கவான் ட.்.பி அவர்களே அப்பணியை செய்ய அனுப்பப்பட்டவர். ழியோர் அடிகளாரின் பணிகளை அருகிலிருந்து கண்டு வியந்தவர். திண்டிவனம் திருச்சபையின் வரலாறு படைத்தவர் இவர். இவர் தனது 01.11.1916 தேதியிட்டு, அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் நகரில் இருந்த விசுவாச பரம்புதல் சபையின் அதிபர் பேராயர் ரேடிகன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார், 'திண்டிவனம் பங்கு கோயிலை கட்டி முடிக்கத் தேவைப்படும் மொத்த தொகையில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது. ழியோர் அடிகளார் உயிருடன் இருந்தபோது, பிரான்சு நாட்டில் இருந்து அவருடைய குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் ஆலயப் பணிகளுக்காக நன்கொடைகளை அனுப்பிக்கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரெஞ்சுப் பகுதியை முதல் உலகப் போரில் எதிரிகள் ஆக்கிரமித்துக்கொண்டதால், அவர்களுக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. இதுவரை அவர்களிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. இந்தப் புனிதமான பணியை நாம்தான் செய்து முடிக்க வேண்டும். எனவே, தாராள மனத்துடன் திண்டிவனம் ஆலயப் பணிகளுக்கு உதவுங்கள்.' மேலும், அக்கடிதத்தில், ஆலய பீடப்பணிகளுக்காக 50 டாலர் கொடுத்த பெண்மணிக்கு நன்றியும், ஆலய பணிகள் நிறைவுறும் போது அத்தொகை பீடத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் என்கிற உறுதிமொழியையும் தருகிறார்.

ட.்.பி அடிகளாரின் வேண்டுகோளின் படி பேராயர் அருட்பணி. அகுஸ்துஸ் கோலாஸ் அவர்களை 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திண்டிவனம் பங்குத் தந்தையாக நியமித்தார். இருவரும் இணைந்து ஆலயக் கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்கினர். ஆலயம் கட்டும் பணிகளுக்குத் தேவையான முழு பணத்தையும் ட.்.பி அடிகளார் சேகரித்துக் கொடுத்தார் என ஆவணங்கள் சான்று பகர்கின்றன. புதுவை மிஷனின் பல்வேறு ஊர்களிலிருந்து திறமை வாய்ந்த கொத்தனார்களும், கட்டக் கலைஞர்களும் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் திண்டிவனத்திலேயே தங்கி ஆலயத்தைக் கட்டினர் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஆலயப் பணிகள் தொடர்வதைக் கண்ட திண்டிவனம் மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். கோதிக் கட்டிடக் கலையில் கட்டப்பட்ட ஆலயம் காண்போரின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. கோவில் முகப்பில் இரண்டு வானுயர் கோபுரங்களும், நடுவில் எழில்மிகு கோபுரத்துடன் கட்டிடக் கலைக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

துல்லியமான வேலைபாடுகளுடன் கோத்திக் கட்டிடக்கலையில் கட்டப்பட்ட இவ்வாலயத்தின் உட்புறம் நம்மை ஆச்சரியத்தின் உச்சத்திற்கே இட்டுச்செல்கிறது. நவீன கருவிகள் இல்லாத அக்காலத்தில் கட்டப்பட்டுள்ள தூண்கள், தூண்களை இணைக்கும் வளைவுகள், கலைநயம் மிகுந்த நடு கோபுரம், ஆலயத்தின் உயர்ந்தோங்கிய கூரை, கீழே முதல் மேல் வரை உள்ள சன்னல்களின் அமைப்பு என கட்டிடக் கலையின் உதாரணங்களாக திகழும் துல்லியம் நம் ஆன்மாவை ஆண்டவரிடம் அழைத்துச் செல்லும் அழகோவியங்களாகும்.

அழகுற கட்டிமுடிக்கப்பட்ட ஆலயமானது, கி.பி. 1925ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் அன்னையின் பிறந்த நாள் அன்று அர்ச்சிக்கப்பட்டது. அந்நாள் திண்டிவனம் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாளாகும். திண்டிவனம் முன்னாள் பங்குத் தந்தையும், அப்போது புதுவை கடற்கரை தூய சம்மனசுகளின் ஆலயப் பங்குத் தந்தையுமான அருட்பணி. போரே அவர்கள் இலத்தீன் மொழியில் பாடல் திருப்பலி நிறைவேற்றினார். அவருடன் முன்னாள் பங்குத் தந்தையர் கோம்ப் அடிகளாரும், கிரேவர் அடிகளார் பலி ஒப்புக்கொடுத்தனர். 20க்கும் மேற்பட்ட பாரீஸ் மறைபோதக குருக்களும், இந்திய குருக்களும் புனிதப்படுத்தும் நிகழ்வில் பங்கேற்றாலும், அப்போது இருந்த ஒழுங்கின்படி மூன்று குருக்கள் மட்டுமே பீடத்தில் பலி ஒப்புக் கொடுத்தனர். பங்குத் தந்தை கோலாஸ் அடிகளார் வழிபாட்டை ஒருங்கிணைத்தார். திருப்பலிக்கு பின்னர் போரே அடிகளார் ஆலயத்தை மந்திரித்துப் புனிதப்படுத்தினார். அன்று ஆலயத்தில் ஒரு ஆலயமணி மட்டுமே இருந்தது. மற்றொரு ஆலயமணியானது, 01.07.1927 அன்று வைக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டது. இரண்டு ஆலயமணிகளும் பிரான்சு நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டவையாகும்.

தூய வியாகுல அன்னை ஆலயமானது கி.பி. 1898ஆம் ஆண்டு அருட்பணி. கோம்ப் அவர்களால் அடித்தளம் போடப்பட்டு, கி.பி. 1925ஆம் ஆண்டு அருட்பணி கோலாஸ் அடிகளாரால் கட்டிமுடிக்கப்பட்டது. ஆலயம் கட்டிமுடிக்க பெரிதும் உழைத்த அருட்பணியாளர்கள். ழியேர் மற்றும் டஃபி அவர்களை காலம் ஒருபோதும் மறக்காது என்பது உண்மையே. இந்த ஆலயம் வெறும் செங்கற்களாலும், சுண்ணாம்புச் சாந்தினாலும் கட்டப்பட்டக் கட்டடம் அல்ல. மாறாக பாரீஸ் மறைபோதக சபை குருக்களின் விடாமுயற்சி, அயரா உழைப்பு, தணியாத ஆன்ம தாகம், அவர்களுடைய குடும்பத்தினரின் தியாகம், விசுவாசம் நிறைந்த பல நூறு உபகாரிகளின் தாராள பொருளுதவியுடன், இப்பகுதியில் வசித்த முன்னோர்கள், கட்டிடக் கலைஞர்கள் ஆகியோரின் கடின உழைப்பும் அடங்கியிருக்கிறது. அத்துடன், குளுனி சகோதரிகள், மான்போர்ட் சகோதரர்களின் இடைவிடா செபங்கள், இறைமக்களின் ஏக்கம் நிறைந்த ஒத்துழைப்பு இவை எல்லாவற்றையும் சேர்த்து கலந்து, இணைத்து கட்டப்பட்ட புனிதமான கட்டடம் இந்த ஆலயம். இது ழியேர் அடிகளாரின் நேர்ச்சைப்படி தொடக்க காலத்தில் புனித வளனாருக்கு நேர்ந்தளிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் தூய வியாகுல அன்னையின் பெயர் பெற்றதாகவும் தெரிகிறது.

இக்கட்டுரையை எழுத ஆக்கமும், ஊக்கமும் அளித்த திண்டிவனம் தூய வியாகுல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. சவரிமுத்து அடிகளார் அவர்களுக்கும், தேவையான செய்திகளை தொகுத்து அனுப்பிய திருவாளர். கஸ்பார் அவர்களுக்கும், புகைப்படங்களை தந்துதவிய திருவாளர். அந்தோணி குரூஸ் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**திருப்பயணம் தொடரும்....**





சோதனைகளின் முடிவிலும் சரி தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்டார் என்கிறது விவிலியம். தூய ஆவியின் வல்லமை அவரை சோதனைகளின் மீது வெற்றிகொள்ள செய்தது. நாமும் இத்தவக்காலத்தில் தூய ஆவியாரின் ஏவுதல்களுக்கும், உந்துதல்களுக்கும் திறந்த மனதுடன் செவிகொடுத்து சோதனைகள் மீது வெற்றிகொள்ள இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேலரின் நம்பிக்கை அறிக்கை எனக் கூறப்படும் வாசகங்களுள் இன்றைய முதல் வாசகமும் ஒன்று. இஸ்ராயேல் மக்கள் துன்பத்திலும், சிறுமையிலும், துயரத்திலும்தான் ஆண்டவரின் உதவியையும், வலிமையும், அருஞ்செயல்களையும் நாடினர். எங்கெல்லாம் கண்ணீர் கசிகிறதோ அங்கெல்லாம் கடவுள் இருக்கிறார். நாமும் நம்முடைய துன்ப நேரங்களில் இறைவனை நோக்கிக் கூக்குரல் எழுப்பும் போது நமக்கும் அவர் செவிசாய்ப்பார் என்ற நம்பிக்கையை நம்மில் விதைக்கும் இவ்வாசகத்தை வாசிக்கக் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஒருவன் மீட்பு பெற வானத்தை அளக்க வேண்டியதில்லை, கடலைத் தாண்ட வேண்டியதில்லை. மாறாக, கடவுளுடைய கட்டளைகளை அனுசரித்தாலே போதும் என்பது இணைச்சட்டத்தின் போதனை. அக்கட்டளைகள் உதட்டிலும் உள்ளத்திலும் இருக்க வேண்டும் என்றும் அதே நூல் நமக்கு கூறுகிறது. எனினும் யூதர்கள் சட்டங்களின் உட்பொருளை மறந்து வெளித்தோற்றத்திலேயே கவனம் செலுத்தினர். புனித பவுல் அடிகளார் கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் நிறைவு. எனவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் என்ற உண்மையை உரக்கக் கூறுகிறார். வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர்கள் அனைவரும் தொடங்கியிருக்கும் இந்த அருளின் காலத்திலே உமது அன்புக் கட்டளையை வாழ்வாக்கி உமது இரக்கத்தையும் அன்பையும் நிறைவாக பெற்று மனமகிழ்வோடு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. உமது பிரசன்னத்தை எங்களுக்கு அனுதினமும் வெளிப்படுத்தும் இறைவா! எங்களது துயரம் நிறைந்த நேரத்திலும், நம்பிக்கை இழந்த நேரங்களிலும் நீர் எங்களோடு இருக்கிறீர் என்பதை உணர்ந்து மனவலிமையோடு வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. சோதனைகளை சாதனைகளாக மாற்ற வல்லமை அளிக்கும் இறைவா! எங்களது நம்பிக்கையின் பொருட்டு நாங்கள் எங்கள் வாழ்வில் சந்திக்கின்ற சோதனைகளைக் கண்டு துவண்டுவிடாமல் எல்லா சோதனைகள் மீதும் உமது வார்த்தையின் துணைக்கொண்டும் தூய ஆவியாரின் துணையாலும் வெற்றியடைய அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா! பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளும் நன்றாக படித்து நல்லதொரு எதிர்காலத்தினை அவர்கள் பெற்று சிறப்பாக இச்சமுதாயத்தில் வாழ்ந்திட அவர்களுக்குத் தேவையான உமது அருள் வரங்களை நிறைவாகப் பொழிந்து வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மரணத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை மாறாக உயிர்ப்பின் மக்களாக வாழ இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. படைப்பின் நாயகனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைஞானத்தோடு செயல்படவும், உமது விருப்பத்தை மட்டுமே தங்கள் வாழ்வில் பேசவும் கூடிய அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் இறைவா! எமது நாட்டுத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் தேவையற்ற பேச்சை தவிர்த்து எல்லோருக்கும் நன்மை பயக்கின்ற செயல்களை செய்யவும் பேசவும் தேவையான இறையருளை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. கருணையின் ஊற்றே இறைவா! நாங்கள் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் எங்களது இயல்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை உணர்ந்து நல்லவற்றையும், பிறருக்கு பயன்தரக்கூடியவற்றையும் பேச எங்களுக்கு உமது அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! நாங்கள் தேவையற்ற பேச்சுக்களை தவிர்த்து, பேச வேண்டிய இடத்தில் பேசவும், பேசக்கூடாத இடத்தில் மௌனம் காக்கவும் தேவையான இறைஞானத்தை நிறைவாக எங்களுக்குப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் முதல் ஞாயிறு (06-03-2022)**
**இச 26:4-10; உரோ 10:8-13; லூக் 4:1-13**

### திருப்பலி முன்னுரை

தவக்காலம் இறை இரக்கத்தின் காலம், இறைவன் நம் அருகில் இருக்கிறார் என்பதை உணர்த்தும் காலம், நாம் இறைவனிடம் திரும்பி வருவதற்கு ஏற்ற காலம். மேலும் தவக்காலம் மனமாற்றத்தின் காலம், புதுவாழ்வை மனதிற்குள் கொணர வேண்டிய காலம் ஆகும். தவக்காலத்தின் முதல் ஞாயிறாகிய இன்று நமது வாழ்வில் வருகின்ற சோதனைகள் மீது வெற்றி கொண்டு மனமாற்றம் பெற்று ஒரு புதிய வாழ்வுக்கு அழைப்பதாக இன்றைய திருவழிபாடு அமைகின்றது.



ஒரு மனிதனின் வாழ்வில் வரும் சோதனைகள், அம்மனிதன் எந்த அளவிற்கு பற்று, பாசம் முதலியவற்றைக் கடந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாக இருக்கிறான் என்பதை சுட்டிக்காட்டுகின்றன. சோதனைகள் எல்லா மனிதருடைய வாழ்விலும் வருகின்றன. சோதனைக்குள்ளாகின்ற எல்லா மனிதர்களும் வீழ்ந்துவிடுவதில்லை. சோதிக்கப்படுவது என்பது வேறு, சோதனையில் வீழ்வது என்பது வேறு என்கிறார் சேக்ஸ்பியர். இத்தகைய சோதனைகள் இஸ்ராயேல் மக்கள் வாழ்விலும் இயேசுவின் பணிவாழ்விலும் எவ்வாறு நடந்தேறின என்பதை சிந்திக்கத் தூண்டுகிறது இன்றைய இறைவார்த்தை.

இயேசு தனது சோதனைகளுக்கு முன்பும் சரி, சோதனைகள் மத்தியிலும் சரி,





# வழுவில்லா வார்த்தை பழுதில்லாப் பெண்



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அகிலம் படைத்த ஆதி யானவர்
மனிதம் படைத்தார் யாம் அறிவோம்
மண்ணைப் பிசைந்து குயவனைப் போல்
தன்னை மாதிரியே எனப் புரிவோம்
    தூசு மண்கொண்டு வடித் தாலும்
    மாசு அண்டா நிலைக் கொடுத்தார்
    கானும் காணா அனைத் தினுக்கும்
    கோனாய் வாழ்ந்திடும் வரம் கொடுத்தார்
தரமாய் வாழ்ந்த மனித னுக்கு
தருணம் அமைத்தான் அலகை யவன்
கோனாய் வாழும் சிறப்பை விட
கோபுரம் உண்டென பசப்பி நின்றான்
    மாசு இல்லா மனித னிடம்
    தூசு அண்ட மனம் படைத்தான்
    பேசும் பேச்சால் மயக்கி வென்று
    நாசம் போக்கில் தடம் பதித்தான்
பாவம் செய்த மானிடன் கண்டு
கோபம் கொள்ளச் செய் தாலும்
நேசிக் கின்ற இறைவ னவர்
வீசி அழிக்க விரும்பி னாரோ?
    நீசன் அவனின் செயல் களுக்காய்
    நேச மகனை வாக் களித்தார்.
    பெண்ணால் நுழைந்த சாபக் கேடு
    பெண்ணால் விரைவில் சாகும் என்றார்.
வழுவில்லா வார்த்தை வல்ல தேவன்
பழுதில்லா பெண்ணை ஆக்கி நின்றார்
தன்னரு தாங்கிடும் தகை மிகுந்த
கண்ணரும் மங்கையை சூட்டிக் கொண்டார்
    மரியா என்பரே அவர் என்று
    அறியா திருப்பவர் எவர் உண்டு?
    பெண்களுள் சிறந்தவர் அவரை விட
    மண்ணிலே உயர்ந்தவர் எவர் உண்டு?



# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## மலாக்கி, தோபித்து

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 4 |
| | 6 | | | | | X | | 8 | |
| | | 9 | | | | | | | |
| | | | | | | 14 | | | |
| | | | | | | 13 | | | |
| | | | | | | 12 | | | |
| | | | | | | | 11 | | |
| | | 10 | | | | | | | |
| | 5 | | | | | | | 7 | |
| 2 | | | | | | | | | 3 |

**இடமிருந்து வலம்**

1. உங்கள் கண்களாலேயே இதைக் காண்பீர்கள் கண்டு இஸ்ரயேலின் எல்லைக்கு …….. ஆண்டவர் மாட்சி மிக்கவராய் இருக்கிறார் என்று சொல்வீர்கள்.
2. அவர்கள் உங்கள் உள்ளங்காலுக் ……. சாம்பலைப் போல் ஆவார்கள் என்கிறார் படைகளின் ஆண்டவர்.
5. அப்பொழுது தோபித்து தம் மகன் தோபியிடம், …….. ஒன்றில் கபேல் கையொப்பமிட்டார்
6. அப்பொழுது தோபியா ……….. சொற்களை நினைவுகூர்ந்து தம் பையிலிருந்து மீனின் ஈரலையும் இதயத்தையும் எடுத்துக்கொண்டார்.
9. பாவமும் ………. புரிவோர் தங்களுக்குத் தாங்களே கொடிய எதிரிகள்.
10. இப்பொழுது மகனே நினிவேயிலிருந்து புறப்படு இங்குத் தங்காதே. என் அருகில் உன் தாயை அடக்கம் செய்தபின் இந்நாட்டின் …….. தங்காதே.

**மேலிருந்து கீழ்**

1. மெய்ப்போதனை அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது. தீமை அவன் உதடுகளில் காணப்படவில்லை அவன் என் திருமுன் ……….. நேர்மையோடும் நடந்து கொண்டான்.





# பொதுக்காலம் 8 ஆம் ஞாயிறு (27-02-2022)
## சீரா 27:4-7; 1கொரி 15:54-58; லூக் 6:39-45

### திருப்பலி முன்னுரை

நாம் பேசும் வார்த்தைகளைக் குறித்து கவனமாய் இருக்க இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய கருத்துக்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம். பேச்சு என்ற ஒன்று மட்டும் இல்லையென்றால் மனித வாழ்வு மயானமாகத்தான் காட்சியளிக்கும். நாம் பேச முடிகின்ற காரணத்தினால்தான், நமது எண்ணங்களை, தேவைகளை, விருப்பங்களை, உணர்வுகளை பிறருக்கு எடுத்துச் சொல்ல முடிகிறது. இப்படிப்பட்ட மேலான கொடையாகிய பேச்சுத் திறமையை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என சிந்தித்துப் பார்க்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு நம்மை அழைக்கின்றது.

நாம் பேசுகின்ற பேச்சு பிறரது மனநிலையில் மட்டுமல்ல உடலில் கூட மாற்றத்தைக் கொண்டு வருகிறது என்பதை உளவியலில் ஒரு பிரிவு சுட்டிக்காட்டுகின்றது. பல வேளையில் துரதிஷ்டவசமாக நம்முடைய பேச்சின் வல்லமையை நாம் உணர்வதில்லை. நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் நமது இயல்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வெளிப்படையாக பார்க்கும்போது நல்ல வார்த்தைகள் நல்ல இயல்பிலிருந்தும், தீய வார்த்தைகள் தீய இயல்பிலிருந்தும் வெளிப்படுகின்றன என்று இயேசு கூறுகிறார். ஆகவே நாம் இறைவனோடு இணைந்திருக்கும் போது நமது சிந்தனை, வாழ்க்கை முறை, பேச்சு போன்ற அனைத்தும் நேர்மையானதாக இருக்கும். எனவே இறைஞானத்தோடு பேசிட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

வாழ்வின் பல்வேறு நிலைகள், சூழல்களை மனதில் வைத்து அறிவுரை கூறுவதாக சீராக்கின் ஞானம் அமைந்துள்ளது. ஒரு மனிதனை அவன் பேச்சு வெளிப்படுத்திவிடும். அவன் பேச்சிலிருந்து அவனது உள்ளத்தை அறிய முடியும் என்கிறது இன்றைய முதல் வாசகம். நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கும் நமது இயல்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை உணர்ந்து பிறருக்கு பயன் தருபவற்றையும், நல்லவற்றையும், நேர்மையான கருத்துக்களையும் பேச இறைஞானத்தை மன்றாடியவர்களாய் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.



### இரண்டாம் வாசக முன்னுரை

விலக்கப்பட்ட மரத்தின் கனியை தின்றால் சாவீர்கள் என்ற உருவகம் இறைவனின் கட்டளையை மீறுவோர் தண்டனைக்குள்ளாவர் என்ற உண்மையை உணர்த்துகிறது. பாவத்தின் விளைவு சாவு ஆனால் கிறிஸ்துவின் மரணம் உயிர்ப்பு வழியாக இச்சாவின் மீது நாம் வெற்றி கொண்டுள்ளோம் என்ற உண்மையை இன்றைய இரண்டாம் வாசகம் உணர்த்துகிறது. எனவே இயேசுவுடன் இணைந்துள்ள நாம்

பகைவர்களையும் நம்மை வெறுக்கின்றவர்களையும் அன்பு செய்து கடவுளின் சாயலில் பங்கு பெற்று வாழத் தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.



## முதல் வாசக முன்னுரை

சவுல் தன்னை கொல்ல தேடியும், தாவீது சவுலின் மீது இரக்கம் கொண்டு அவருடைய உயிரை பாதுகாக்கிறார். தாவீதின் மன்னிக்கும் குணத்தையும், இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டவருக்கு அவர் தரும் மரியாதையையும் இன்றைய முதல் வாசகம் வெளிப்படுத்துகிறது. தாவீதைப் போல நாமும் நம் பகைவர்களை மன்னிக்கவும், அருட்பொழிவு செய்யப்பட்டவர்களை மதித்தும் வாழ வரம் வேண்டி இன்றைய முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆதாம் மண்ணைச் சார்ந்தவர், கிறிஸ்துவோ விண்ணைச் சார்ந்தவர். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆதாமின் சாயலை மட்டுமல்ல, கிறிஸ்துவின் சாயலையும் தாங்கியவர்கள். ஆதாமின் மனித இயல்பு பழிவாங்கும் இயல்பு, கிறிஸ்துவின் தெய்வீக இயல்பு மன்னிக்கும் இயல்பு. நாம் நமது பகைவர் மட்டில் பொறுமைமிக்கவர்களாக செயல்பட்டு, அவர்களுக்கு தீமைக்குப் பதிலாக நன்மை செய்ய ஆரம்பிக்கும்போது நாமும் நம்மில் உள்ள இறைஇயல்பை வெளிப்படுத்துகிறோம். எனவே தூய ஆவியால் வழிநடத்தப்பட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. வழிகாட்டும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் அன்புக் கட்டளையை வாழ்வாக்கி சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்க அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
2. பகைவரையும் மன்னித்து அன்பு செய்ய எங்களை அழைக்கும் எம் இறைவா! நாங்கள் அனைவரும் எங்களது பகைவர்களை அன்பு செய்யவும், எங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யவும் அதன் வழியாக உமது இறைஇயல்பில் பங்கு பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. ஒரு கண்ணத்தில் அறைந்தால் மறுகண்ணத்தையும் காட்டுங்கள் என்று மொழிந்தவரே எம் இறைவா! உமது பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை மனதார மன்னிக்கவும், உம்மால் அருட்பொழிவு செய்யப்பட்டவர்களை உதாசினப்படுத்தாமல் மதித்து வாழவும் உமது அருளையும் ஆசியையும் எங்களுக்குப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா! கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டுள்ள உம் மக்கள் விரைவில் சுகம் பெறவும் இந்த பெருந்தொற்றானது மனிதர்களிடமிருந்து முழுமையாக அகற்றப்படவும் இதனால் மனிதர்கள் அனைவரும் நலத்தோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





4. அதே நாளில் மேதியா நாட்டின் எக்பத்தானா நகரில் வாழ்ந்துவந்த இரகுவேலின் மகள் சாரா தன் ……….. பணிப்பெண்களுள் ஒருத்தி தன்னை பழித்துரைத்ததைக் கேட்க நேரிட்டது.
6. உடனே ……… துள்ளி எழுந்து அவரை முத்தமிட்டு மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தார்.
8. அவர்கள் நினிவேக்கு எதிரே இருந்த …….. நகரை நெருங்கியபொழுது இரபேல்
9. என்றும் வாழும் கடவுள் போற்றி! ஏனெனில் …….. ஆட்சி எக்காலத்துக்கும் நிலைக்கும். அவர் தண்டிக்கிறார் இரக்கமும் காட்டுகிறார்.

**கீழிருந்து மேல்**

2. நீங்களும் உங்கள் இனத்தார் …….. என்னைக் கொள்ளையடித்ததால் சாபத்துக்கு உள்ளானீர்கள்.
3. வீடு திரும்பியதும் குளித்து விட்டுத் துயருடன் உணவு………
5. …………… நான் சொல்வதைக் கேளும். சகோதரரே அந்தப் பேயைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். சாராவை மணந்து கொள்ளும்.
7. 'ஐயோ! என் மகனே என் ……….. ஒளியான உன்னைப் போகவிட்டேனே!' என்று கலங்கினார்.
11. தோபித்து அசீரியர்களின் மன்னரான ………… காலத்தில் திசிபேயிலிருந்து நாடு கடத்தப்பட்டார்

**வலமிருந்து இடம்**

3. …………… மேதியா நாட்டில் வாழ்ந்துவந்த கபிரியின் உடன்பிறப்பான கபேலிடம் நானூறு கிலோ வெள்ளியைக் கொடுத்து வைத்தேன்.
4. எனவே அவர் தம் மகன் தோபியாவை அழைக்க அவரும் …… வந்தார்.
7. சகோதரர் அசரியா நீர் நான்கு பணியாளர்களை அழைத்துக்கொண்டு இரண்டு ஒட்டகங்களோடு இராகிக்குப் புறப்பட்டுக் ………. செல்லும்.
11. என் உறவினர் முறையார் அனைவரும் ……… வருந்தினர். எலிமாய் செல்லும்வரை இரண்டு ஆண்டுகளாக அகிக்கார் என்னைப் பேணிவந்தான்.
12. அதே நாளில் மேதியா …… எக்பத்தானா நகரில் வாழ்ந்துவந்த இரகுவேலின் மகள் சாரா தன் தந்தையின் பணிப்பெண்களுள் ஒருத்தி தன்னைப் பழித்துரைத்ததைக் கேட்க நேரிட்டது.
13. தம்முடன் மேதியாவுக்குச் செல்ல வழி …… ஒருவரைத் தேடித் தோபியா வெளியே சென்றார்
14. தோபியா தம் பாதங்களைக் கழுவத் …….. ஆற்றில் இறங்கினார்.

**சென்ற மாதத்தின் விடைகள்:** செக்கரியா .

**இ. வ.** **1.** 1:10; **3**. 5:3; **5.** 7:9; **6.** 9:4; **7.** 11:3

**மே. கீ.** **1.** 2:5; **2.** 9:11; **5.** 8:16; **7.** 12:1; **8.**14:4; **9.** 3:7

**வ. இ.** **2.** 3:1; **4.** 6:11; **8.** 13:1; **9.**13:2; **10.** 9:14

**கீ. மே.** **3.** 4:11; **4.** 10:6; **6.** 10:2; **10.** 7:8; **11.** 11:1

· **விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-02-2022**

(முகவரி

**The Editor**
**Appadiye Agattum**
**5/301, Matha Koil Street**
**Rajiv Gandhi Road**
**Okkiampet, Chennai - 97**

# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்தா லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



## பொதுக்காலம் 6 ஆம் ஞாயிறு (13-02-2022)

**எரே 17:5-8; 1கொரி 15:12,16-20; லூக் 17:20-26**

### திருப்பலி முன்னுரை

நம்பிக்கையில்தான் உலகம் இயங்குகிறது. ஓட்டுநரை நம்பி நாம் பேருந்துகளில் பயணம் செய்கிறோம்; சமையல்காரரை நம்பி நாம் உணவகம் செல்கிறோம். எனவே நம்புவது தவறில்லை. ஆனால் திருப்பாடல் 118:8 கூறுகிறது, 'மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம். இறைவனை நம்பி சரண் அடைபவன் நீர் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பாவான்' என்று. இவ்வுலகு காட்டும் வழியைப் பின்பற்றினால் நிலையற்ற செல்வம் கிடைக்கலாம். ஆனால் கடவுள் காட்டும் வழியை பின்பற்றினால் நிலையான செல்வம் கிடைக்கும். அனைத்து பொருட்களும் மனித மேம்பாட்டிற்காகவே படைக்கப்பட்டுள்ளன. பொருளைத் தேடி, வருவாயைப் பெருக்கி, குடும்பத்தைப் பேணுவது குடும்பத் தலைவரின் கடமை. ஆனால் இவ்வுலகப் பொருள்களையே தமது குறிக்கோளாகக் கொண்டு, அவற்றை கடவுளாக வழிபடுபவன் பாலைவனப் பூண்டிற்கு சமமாவான்.

மனிதருக்குப் பொருளும் வேண்டும்; அருளும் வேண்டும். பொருளில்லாதவர்கள் இவ்வுலக இன்பங்களைத் துய்க்க முடியாது. அருளில்லாதவர்கள் மறுமைப் பேரின்பத்தைப் பெற முடியாது. பொருளைத் தேடி அலையும் நாம் அருளுக்கு முதலிடம் கொடுத்தால் மற்றனைத்தும் சேர்த்து நமக்குத் தரப்படும் என்ற உறுதிமொழியை கடவுள் இன்று நமக்குத் தருகிறார். எனவே உலக உறவுகளின் மேலும் உலகச் செல்வங்கள் மீதும் நம்பிக்கை வைப்பதைவிட இறைவன் மீது நம்பிக்கை கொண்டு இறையருளைத் தேடுவோம். அதற்கான இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.



### முதல் வாசக முன்னுரை

இஸ்ராயேல் மக்கள் தம் உடன்படிக்கையின் கடவுளை மறக்கவும் மறுக்கவும் தொடங்கியபோது எரேமியா இறைவாக்கினர் தோன்றி அவர்களை எச்சரிக்கின்றார். அவர்கள் தங்களது படைபலத்திலும், வேற்று அரசர்களின் வலிமையிலும் நம்பிக்கை கொண்டனர். இதை விடுத்து இறைவனில் நம்பிக்கை கொள்ளும்படி





அழைப்பு விடுக்கின்றார். மனிதரில் நம்பிக்கை வைப்போர் சபிக்கப்பட்டவர், ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர் எனக்கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவின் உயிர்ப்பு நம் விசுவாசத்தின் ஆணிவேரும் அச்சாணியுமாக இருக்கின்றது. உயிர்ப்பு வாழ்வில் நமக்குள்ள நம்பிக்கை, இயேசுவின் உயிர்ப்பிலே ஊன்றி நிற்கின்றது. பொய்மையைவிட உண்மையே சக்திமிக்கது, நன்மை தீமையை வென்றது, அன்பு பகைமையை ஆட்கொண்டது என்ற உண்மையை உணர்த்தும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் ஆயனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களது அனுதின வாழ்வில் உம்மீது நம்பிக்கை கொண்டு உம்மில் தஞ்சம் புகுந்து உமது அருளை நிறைவாகப் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! நாங்கள் உலக உறவுகளுக்கும் உலக செல்வங்களுக்கும் அடிமையாகாமல், உமது அருளை நாங்கள் தேடவும், நாங்கள் கொண்டிருக்கும் செல்வங்களை ஏழைகளோடு பகிர்ந்து வாழவும் அதன் வழியாக உமது மீட்பை பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உயிர்ப்பும் உயிரும் நானே என்று மொழிந்த எம் இறைவா! உமது உயிர்ப்பிலே விசுவாசம் கொண்டு வாழும் நாங்கள் அனைவரும் உண்மையும், நன்மையும், அன்பும் நிறைந்த மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. எங்கள் துன்பங்களில் துணைவருபவரே எம் இறைவா! உமது மதிப்பீடுகளைப் பின்பற்றுவதால் வரும் துன்பங்களைக் கண்டு கவலையுறாமல் எமது துன்பங்கள் பிறருடைய மீட்புக்கு உதவுவன என்பதை உணர்ந்து துன்பங்களை இன்முகத்துடன் ஏற்று வாழத் தேவையான வலிமையையும் ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 7 ஆம் ஞாயிறு (20-02-2022)

**1சாமு 26:2,7-9,12-13,22-23; 1கொரி 15:45-49; லூக் 6:27-37**

### திருப்பலி முன்னுரை

'உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்; மன்னியுங்கள், மன்னிப்புப் பெறுவீர்கள்' என்கிற உன்னதமான அழைப்பை இன்றைய திருவழிபாடு நமக்கு அளிக்கின்றது. கிறிஸ்துவின் பணி மீட்புப் பணி, ஒப்புரவுப் பணி. இயேசு வாழ்ந்த போது யூதா இனத்துக்கும் பிற இனத்துக்கும் இடையே நின்ற பகைமை என்னும் சுவரைத் தகர்த்து அவ்விரண்டு இனத்தையும் ஓரினமாக ஒப்புரவாக்கினார். கிறிஸ்து திருஅவையிடம் அதே ஒப்புரவுப் பணியை ஒப்படைத்துள்ளார். இன்றைய இறைவார்த்தை வழிபாடு நாம் நம் பகைவர்களையும் மன்னித்து அவர்களோடு ஒப்புரவாகும்படி அழைக்கின்றது.

நம் பகைவரை அன்பு செய்வதன் வழியாக நாம் கடவுளின் இயல்பில் பங்கெடுக்கிறோம். மேலும் நம் உள்ளத்தில் நிம்மதி நிரம்பி வழியச் செய்கிறது. எனவே நமது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் நம்